# காஞ்சி

விலை 20 காசு

8-10-67

"அண்டை மாநிலத்தினருடன் எந்த மொழியில் தொடர்பு கொள்வது என நாம் கவலை கொள்வதற்கு முன்பு, நமது மக்களுக்கு எப்படி வயிறார உணவளிப்பது என்பதில் முனைவோம்,'' என்று செப். 24 அன்று கல்கத்தாவிலிருந்து வெளிவரும் 'ஸ்டேஸ்மென்' ஆங்கில நாளிதழ் நிருபருக்கு அளித்த பேட்டியின்போது அறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள்.

தமிழக முதல்வர் அறிஞர் அண்ணா அவர்கள் இல்லம் 'தாயகத்தின்' முன்பு நின்றிருந்த மோட்டார் கார் நிறைய கால் வைக்க இடமின்றி அரசாங்க பைல்கள் நிரப்பிவைக்கப் பட்டுள்ளன. முதல்வரைப் பேட்டி காண இருபதுக்கும் மேற்பட்டவர்கள் வெளியே விருந்தினர்கள் அறையில் காத்துக் கொண்டிருக்க, ஆயுதம் தாங்கிய காவல்காரர் ஒருவர் கேட்டுக்கு வெளியே காவல் புரிந்துகொண்டிருக்கிறார். தனது முடிவுக்காகக் காத்துக் கொண்டிருக்கும் பைல்களை ஆய்ந்து முடிக்க அடிக்கடி யாரும் காணாத இடங்களுக்கு மறைந்துவிடுவதுபோல், எப்போதும்போல திறந்தே கிடக்கும் அவரது வீட்டில், அன்றும் அவ்வாறே மறைந்துவிட அண்ணா தயாராகிக்கொண்டிருக்கிறார். நிருபர் உள்ளே நுழைகிறார்;

'தொடர்பு மொழி' என்பது குறிப்பிட்ட ஒரு சிலருக்காக எழும் பிரச்னை எனக் கருதும் அண்ணா அவர்கள் "95 சத விகித மக்கள் அந்தந்தப் பகுதியிலேயே வாழ்பவர்கள். இவர்கள் மற்ற மொழி பேசுவரை சந்திக்கும் வாய்ப்போ, சந்தர்ப்பமோ ஏற்படுவதில்லை, ஆகவே அவர்கள் பேசுவதைவிட வேறு மொழியையும் கற்கவேண்டும் என்பதற்கு என்ன அவசியமுள்ளது?'' என பேட்டி காண வந்த நிருபரையே கேள்வி கேட்டார்கள். மேலும்,

வெளி மாநிலத்தோருடன் அவசியம் தொடர்பு கொண்டாக வேண்டும் என்கிற நிலையிலுள்ளவர்களுக்கு, மற்றும் அரசாங்க அதிகாரிகளுக்கு, வியாபாரத் துறையிலுள்ளவர்க்ட்கு, ஆங்கிலம் ஏற்கனவே தொடர்பு மொழியாகப் பயன்படுகிறது. இந்தியே தொடர்பு மொழியாக வேண்டும் என்று வாதாடுபவர்கள்கூட, இன்றுள்ள நிலையில் உயர்நிலைக் கல்விக்கு இந்தி போதாது என்று ஆங்கிலமும் ஒரு பாடமொழியாக இருக்கவேண்டும் என ஒப்புகிறார்கள்.

'பல மொழி பேசும் ஒரு நாட்டில், தொடர்பு மொழியை, தேவையின் அவசியங் குறித்தே தீர்மானிக்கவேண்டும்' ஆந்திர மாநிலத்துடன், வியாபாரத்திலோ அல்லது மற்ற துறையிலோ தொடர்பு கொண்டுள்ள சென்னையின் பெரும்பகுதிக்கு இந்தியைவிட, தெலுங்கு மொழியையே தொடர்பு மொழியாக கற்பிக்க வேண்டுவது அவசியம். சென்னையின் மற்ற பகுதிக்கு தாய்மொழியை அடுத்த இரண்டாவது மொழி, நடைமுறை அடிப்படையில் மலையாள மொழியே இருக்கப் பெறவேண்டும்.'' என்று தொடர்பு மொழி பற்றி விளக்கினார்கள்.

'மொழிப் பிரச்னையில் நாம் பொறுத்துத்தான் செயலாற்ற வேண்டும்' என்பதைக் குறிப்பிட்டு தமிழக முதல்வர், 'இந்தப் பிரச்னையில், பத்து அல்லது பதினைந்தாண்டுகள் என்கிற எந்த கடுமையான வரையறையும் கூடாது. இவற்றை இயற்கையாக முடிவு பெறும் ஒரு தீர்வுக்கு விடவேண்டும்.

பிரச்னைகளை விரைந்து அணுகுவதால் ஏற்படப் போகும் பலன் ஏதுமில்லை. மேலிருந்து (ஒரு பொருளை) திணிப்பதால் எதிர்பார்க்கும் மாற்றம், அவற்றை கீழிருந்து தாங்கும் சக்தியையும் பொருத்துள்ளது.' என்றும் விளக்கினார்கள்.

# மொழியும் உணவும்

## அண்ணாவின் கருத்துக்கள்

'நாம், மொழிப் பிரச்னையை 1990ம் ஆண்டுவரை கிளப்பாமல் காலக் கிடங்கில் போட்டுவைக்க வேண்டும் என நான் விழைகிறேன். இதனால் மக்களின் அடிப்படைத் தேவைகளை—அவற்றிலும் முதலாவதான உணவைப் பெற—நாம் நேரத்தை முழுதும் செலவிட உதவும்.'' என்றார்கள்.

இந்தி பேசாத மக்கள், இந்தி வேண்டும் என்று சொல்கிறவரை, ஆங்கிலமே நீடிக்கவேண்டும் என நேரு அளித்த வாக்குறுதிக்கு சட்ட வடிவம் தர நாடாளு மன்றத்திற்கு வரவிருக்கும் தீர்மானத்தைக் குறித்து தனது கருத்தைக் கூறுகையில், "அரசியல் சட்டத் திருத்தமன்றி வேறெதுவும் தமிழக மாணவர்களுக்கோ தனக்கோ அல்லது கழகத்திற்கோ திருப்தி தராது,'' என்றார். மேலும் அவர் கூற்றுக்கு வலிவு தரும் முறையில் தொடர்ந்து கூறுகையில் "நாடாளுமன்றத்தில் கொணரவிருக்கும் 'தீர்மான சட்டம்' தமிழகத்தின்விருப்பத்திற்கு உட்பட்டதாயினும், 'அவை மாநிலத்தின் ஒரு குறிப்பிட்ட பங்கினரைத்தான் திருப்திப்படுத்தும்,'' என்றார்.

நாட்டின் உணவுக்கொள்கை சிறந்த மூன்று வழிவகைகளைக் கொண்டதாக இருக்கவேண்டும் என அறிஞர் அண்ணா விரும்புகிறார்கள்.

முதலாவதாக: கொள் முதல்.

இவற்றில் தற்போது உணவுத் தானியங்கள் மட்டுமே கொள் முதல் செய்யப்படுகின்றன. மேலும் பருப்பு வகைகள், சமையல் எண்ணெய் போன்றவைகளையும் அரசே கொள்முதல் செய்யவேண்டும் என விழைகிறார். தென் மாநிலங்கள், பருப்பு வகைகளை பெரும்பாலும் உத்திரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம் போன்ற மாநிலங்களிலிருந்தே தனியார் துறை மூலம் பெருகின்றன. இவற்றை மத்திய அரசே மேற்கொண்டு, இப்பண்டங்கள் பயிராகாத மாநிலங்களுக்குத் தேவையானதை, நியாய விலையில் விநியோகம் செய்ய முன்வர வேண்டும். ஆந்திர முதல்வர் திரு. பிரம்மானந்த ரெட்டியாரும் இதே கருத்தைக் கொண்டிருப்பதாக அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள்.

இரண்டாவதாக, நாட்டு கொள் முதல் திட்டத்தில் எல்லா மாநிலங்களும் ஒழுங்காக நடக்க; மாநிலங்களுக்குப் பரிசும் தவறு செய்கிற மாநிலம் தண்டனை பெறும் வகையிலும் ஒரு பரிசுத் திட்டம் துவக்கவேண்டும் என விரும்புகிறார். இப்படி தான் ஒப்புக்கொண்ட விதிகளிலிருந்து எந்த மாநிலமாவது தவறி நடந்தால் அவற்றை தண்டிக்கும் வகையில் மத்திய அரசு, தான் அளிக்கும் சில உதவிகளை நிறுத்தவேண்டும்.'' என்கிறார்.

மூன்றாவதாக, வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்ய வேண்டும் என்பதற்காக, உள்நாட்டில் கொள்முதல் செய்வதால் நாட்டிற்கு ஏற்படும் தொந்தரவைப் போக்கும் வகையில் கொள்முதலை ஒழிக்கவேண்டும். (உம்: சர்க்கரை) இம்மூன்று வழிகளும், கடைப்பிடித்தால், நாட்டின் உணவுக் கொள்கையில் வெற்றி பெற முடியும் என்பதோடு, மாநிலங்கள் ஒவ்வொன்றும் குறைந்தது 10 சத விகித அளவுக்காவது கொள் முதல் செய்யவேண்டும் என்று மத்திய அரசின் தீர்மானத்தை அறிஞர் அண்ணா அவர்கள் மனதார வரவேற்கிறார்கள். சென்னை மாநிலம் ஏற்கனவே 10 சத விகித தேவையை கொள்முதல் மூலம் சரிசெய்கிறது என்றார்.

—கேட்டு எழுதியவர்: சி. தட்சண.

முகப்பில்: தமிழக சட்டமன்ற உறுப்பினர்கள்

பா. நாகலிங்கம்—பொன்னேரி

சி. வி. எம். அண்ணாமலை—கடம்பத்தூர்

முனுஆதி—திருப்போரூர்

# காஞ்சி

ஆண்டு சந்தா ரூ. 10 ஆறுமாதம் ரூ. 5

மலர் 4 8—10 67 இதழ் 11


# காங்கிரஸ் காது--கேட்காது!

"அடுத்த ஆண்டு நடைபெற விருக்கிற ஊராட்சி நகராட்சித் தேர்தல்களில், காங்கிரஸ் கட்சி கட்சிச் சார்பற்றமுறையில் போட்டியிட விருப்பம் தெரிவிக்குமானால், தி. மு. கழகமும் அவ்வாறே கட்சிச் சார்பற்ற முறையில் போட்டியிடும்"

என்ற வகையில் தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் அண்மையில் ஒரு கருத்தறிவித்தார்கள்.

ஊராட்சி அல்லது நகராட்சி என்பது அந்தந்த ஊர்களின் உள்விவகாரத்தைத் தீர்த்துக் கொள்வதற்கும், துப்புரவுப் பணி குடிநீர் வழங்கல் முதலான அலுவல்கள் சீராகவும், செம்மையாகவும் நடைபெற்றுக் கொண்டிருப்பதற்குமான பணிகளைக் கவனித்துக் கொள்வதற்கான ஒரு அமைப்பாகும்.

தெருக்களைத் துப்புரவு செய்வதிலோ, அல்லது குடிநீர் வழங்குவதிலோ கட்சி அரசியலுக்கு எந்தவகையிலும் இடமிருக்க முடியாது.

திராவிட முன்னேற்றக் கழகம், எதிர்க்கட்சியாக இருந்த காலத்தில் நகர மன்ற, பஞ்சாயத்துத் தேர்தல்களில் கட்சி அரசியல் இருக்கக்கூடாது என்பதனை அடிக்கடி வலியுறுத்தி வந்திருக்கிறது.

உள்ளூரின் பொது அமைப்பொன்றில் கட்சி அரசியல் இடம் பிடித்துக்கொண்டு பொதுநலன்களைப் பாதிக்கும்படியான விவகாரங்களை உண்டுபண்ணிக் கொண்டு வந்திருப்பது தமிழகம் கண்கூடாகக் கண்டு கொண்டுள்ள உண்மையாகும். சான்றுக்கு நெல்லை நகர மன்றமும், அருப்புக்கோட்டை நகர மன்றமும் காங்கிரசுக்காரர்களால் கலைக்கப்பட்ட நிகழ்ச்சியே போதுமானதாகும்.

பொதுநலன் பேணும் விஷயத்தில் கட்சி அரசியல் தேவையா? என்ற சிந்தனை கழகத்திற்கு விரிவடைந்திருப்பதனாலேயே, முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள், இதனை காங்கிரஸ்காரர்களின் கவனத்துக்கு மீண்டும் கொண்டு வந்திருக்கிறார்கள்.

அதிகார பீடத்தில் எந்த அரசியல் கட்சி அமர்ந்திருக்கிறதோ, அந்த கட்சி தன் அதிகார வலிவைப் பயன்படுத்தி, பட்டி தொட்டி எங்கும் தன் கட்சிக்கு வலிவு தேடிக்கொள்வதும், சிற்றூர். பேரூர் அதிகாரங்கள் யாவற்றையும், தனது கட்சியே கைப்பற்றிக் கொள்ளும்படியான வாய்ப்புக்களை உண்டாக்கிக் கொள்வதும், எளிதில் இயன்ற ஒன்றுதான்!

ஆனால், ஜனநாயக உள்ளுணர்வு உள்ள எந்த ஒருவரும் இத்தகைய தீய செயல்களுக்குத் தானாகத் தன்னை ஆட்படுத்திக்கொள்ள விரும்பமாட்டார்கள்.

காங்கிரசுக் கட்சியே கடந்த இருபது ஆண்டுக் காலத்திலும் அதிகார பீடத்தைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டிருந்ததனாலும். எதிர்காலத்திலும், பதவிகள் தங்களுக்கே இருக்கவேண்டும் என்ற கெடுமதியோடு செயல்பட்டுவந்ததானாலும், ஊராட்சி, நகராட்சிகளில்கூட கட்சி அரசியலைப் புகுத்தி வைத்திருந்தது.

ஆளும் ஒரு கட்சி ஜனநாயகப் பண்புக்கு மாறாக கட்சி அரசியலிலேயே லாபம் தேட நினைத்துச் செயல்படும்போது, ஜனநாயக உணர்வு மிக்க ஒரு கட்சி, தானும் கட்சி அரசியலிலிருந்து பின்வாங்கி விட முடியாத நிலை தானாகவே எழுந்து, தன் உணர்வினையும் கொன்றுகொள்ள ஏதுவாகிவிடுகிறது.

இதனாலேயே கழகமும், காங்கிரசை எதிர்த்து கட்சி ரீதியிலே இதுவரை போட்டியிட்டு வந்திருக்கிறது, ஊராட்சி நகராட்சி போன்ற தேர்தல்களில்.

ஆட்சி அதிகாரத்தை அண்மையிலேயே கழகம் மேற்கொண்டிருப்பதனாலும், தமிழகத்தில், பல சிற்றூர் பேரூர்களில் இன்னமும் காங்கிரசே அதிகாரத்தைக் கைப்பற்றிக்கொண்டு, செயல்பட்டு வருவதனாலும், எதிர்காலத்திலும் காங்கிரஸ் ஜனநாயக உணர்வை மதித்து புத்திசாலித்தனமாக நடந்துகொள்ளும் என்பதனை நம்பமுடியாம லிருப்பதனாலும். இப்போது கழகம், இந்த விஷயத்தில் முன்னோடியாக இருக்க இயலாமலிருக்கிறது என்பதனை அறிவாளர்கள் ஒப்புக்கொள்கிறார்கள்.

அதனால்தான் அறிஞர் அண்ணா அவர்கள், இத்தகு தேர்தல்களில் காங்கிரஸ் கட்சிச் சார்பற்ற முறையில் போட்டியிடுமானால், கழகமும் கட்சிச் சார்பற்றுப் போட்டியிடும் என்று எடுத்துக் காட்டி இருக்கிறார்கள்.

உண்மையிலே காங்கிரசுக் கட்சிக்கு ஜனநாயகப் பண்பினை மதிக்கின்ற புத்தி இருக்குமானால், இந்தியத் துணைக்கண்டத்தின் அரசியல் இன்றைக்கு இவ்வளவு கீழான முறையில் இயங்கிக் கொண்டிருக்காது.

அதிகாரம் கையிலிருக்கிறது என்ற ஒரே ஒரு ஆணவப் போக்கினாலேயே. ஒவ்வொரு மாநிலத்திலும் அரசியல் குழப்பங்களை வலுவில் உண்டாக்கிக்கொண்டிருக்கிறார்கள் காங்கிரசுக்காரர்கள். அதிகாரம் பறிக்கப்பட்ட மாநிலங்களில், அராஜகத் தன்மையைக் கட்டவிழ்த்து விட்டிருக்கிறார்கள்.

படுபாதகங்களையே செய்துப் பழகிப்போனவர்களிடம் நாம் ஜனநாயகப் பண்பை எதிர்பார்க்க முடியுமா?

ஒரு காந்தியாரும். ஒரு திலகரும் கட்டிக்காத்துத் தந்த ஒரு புனிதமான இயக்கத்தை, அந்த இயக்கத்தின் மீது உண்மைப்பற்றுள்ள எந்த ஒருவரும், காங்கிரசின் இன்றைய இழிச் செயல்களை அனுமதிப்பார்களா?

காந்தியடிகளின் திருப் பெயரை உச்சரிப்பதொன்றினாலேயே. தங்களைக் காங்கிரசுக்காரர்கள் என்றெண்ணி செயல்படுவோர் மிகுந்துவிட்ட காங்கிரஸ் உள்ளபடியே ஜனநாயக உணர்வை மதிப்பதாக இருந்தால், நாட்டு மக்களுக்கு எப்படியாவது நல்வாழ்வு சித்திக்கப் பெற வேண்டும் என்பதில் அக்கறை உடையவர்களாக இருந்தால் கட்சி அரசியலினால், பொது நலன் பாதிக்கப்படக் கூடாது என்ற நல்லெண்ணம் இழந்ததுபோக இன்னமும் ஏதேனும் எஞ்சி இருக்குமானால்—

பேரறிஞர் அண்ணா அவர்களது இந்த நல்ல சமிக்ஞையைக் காது கொடுத்துக்கேட்டு, கருத்துத் தெளிவொடு செயல்பட — ஊராட்சி, நகராட்சித் தேர்தல்களில் கட்சி அரசியலின்றியே ஈடுபட தன்னாலும் முடியும் என்பதைச் செயல் பூர்வமாக எடுத்துக்காட்டட்டும்! எடுத்துக் காட்டுமா? எதிர்பார்ப்போம்!

# நிலையும் நினைப்பும்

அன்புள்ள நண்பா!

'நிலையும் நினைப்பும்' என்ற இந்தத் தலைப்பைக் கொண்டு, உன் நிலையையும் அதனால் எழுந்து ஆட்டிப் படைக்கின்ற உன் நினைப்பையும் பற்றி மட்டும் நான் எழுதப்போகிறேன் என்று நீ நினைத்தால் ஏமாற்றம் அடைவதினின்றும் உன்னைத் தடுத்து நிறுத்த என்னால் முடியாது!

கன்னி இளமானை, கட்டழகுப் பெட்டகத்தைப் பற்றி அவளது நிலையையும், அதனால் பிறந்த எதிர்கால இன்பங்கள் இப்படி இப்படி இருக்கவேண்டும்; வருங்கால காதலனோடு இப்படி இப்படி இந்த இந்த வகையில் இன்னின்ன முறையிலெல்லாம் ஆடிப்பாடி மகிழவேண்டும்; அணைத்துப் பிணைத்து இன்பந் துய்க்கவேண்டும் என்பன போன்ற நினைப்புக்களைப் பற்றியும் நான் எழுதப் போவதில்லை.

நிலை—ஒருபடி.

நினைப்பு—இன்னொருபடி

ஆக, இந்த நிலையும் நினைப்பும் மொத்தத்தில் எங்கெங்கே எப்படி எப்படி அரசோச்சுகிறது என்று எண்ணிப்பார்க்கத் தக்கதொரு வாய்ப்புக் கிடைத்தது. எண்ணிப்பார்த்தேன்! எழுதத் தொடங்கிவிட்டேன்! முதலில் நீ எதிர்பார்த்தவைகளும் இருக்கக் கூடும். எதிர்பாராதவைகளும் காணக் கூடும்!

> "பரிமாறப்படுவதை ஏற்றுக்கொள்ளாமல் அது கொண்டு வா, இது கொண்டு வா என்று இல்லாததையெல்லாம் விருந்தாளி கேட்க ஆரம்பிக்கலாமா? வாழ்க்கையில் எத்தனையோ இன்பங்கள் நமக்கு வழங்கப் பெற்றிருக்கையில், வழங்கப்படாதவற்றுக்காக வேண்டிக்கொண்டிருப்பது முறையாகுமா?"

நான் கேட்கவில்லை. எபிக்டெடஸ் என்ற மேனாட்டு மேதை கேட்டிருக்கிறான் இப்படி! முற்றுந்துறந்து முனி புங்கவர்களாகிவிடும் நிலை இன்றைக்குப் பொதுவாக உலகின் எந்தப் பகுதியிலும் இருப்பதாகத் தெரியவில்லை

எந்தவொரு காரணத்துக்காக — எந்தவொன்றினடிப்படையில்—எந்த ஒரு எண்ணம்—எந்த ஒருவருக்குப் பிறந்தாலும், அந்த ஒன்றில், அந்த ஒருவரை 'ஆசை' ஒரு அணு அளவேனும் ஆக்கிரமித்துக் கொள்ளாதிருக்க முடியாது.

ஆக்கிரமித்துக் கொண்ட 'ஆசை' எதற்குப் பயன்படுகிறது—பயன்படுத்தப்படுகிறது என்பதிலேதான் வாதங்கள் இருக்க முடியும்.

மனிதன்—பல தரப்பட்ட ஆசைகளின் ஒட்டு மொத்தமான ஒரு கலவை அல்லவா!

'விருந்து' என்றால் இப்படிப் பலதரப்பட்ட 'கலவை' கள் ஒருங்கு கூடி உண்ணும் ஒரு நிலையல்லவா!

'விருந்து' ஒன்றுக்குக் கூடுவோரும் சரி, கூட்டுவோரும் சரி, கலவைகள்தான் என்பதில் ஐயமில்லை; ஆனால் 'கலவை' முறையைப் புகுத்த முடியுமா?

'கலவை'களின் பிறப்புதான் சமையல் என்றாலும், சமைத்து முடிந்த பின் அது ஒரு 'சுவை'ப் பண்டமாகிவிடுகிறதே!

அந்த ஒரு 'சுவைப்பண்ட'த்தைதானே' கலவைகள் கூடிப் புசிக்கத் தொடங்குகின்றன!

அவ்வாறு புசிக்கக் கூடிவிட்ட பின்னர் விருந்து என்று பெயர் கொண்டுவிட்ட பின்னர்—தம்தம் ஆசைகளைக் கேட்டு அங்கே போராட்டம் நடத்தலாமா? பயன் தருமா? அது முறையா?

இதனைத்தான் கேட்கிறார் எபிக்டெடஸ். விருந்தில் அமர்ந்துகொண்டு, தத்தம் விருப்பு வெறுப்புக்களின் இயல்பிற்கு இணைய அதுவேண்டும், இதுவேண்டும் என்று கேட்கக்கூடாதுதான். எபிக்டெடசின் நினைப்பு சரி, அடுத்து?

> வாழ்க்கையில் எத்தனையோ இன்பங்கள் நமக்கு வழங்கப் பெற்றிருக்கையில், வழங்கப்படாதவற்றுக்காக வேண்டிக்கொண்டிருப்பது முறையாகுமா?

கேட்கிறாரே, இப்படி! முறையா? அவரது நிலை என்ன?

எபிக்டெடஸ், தமிழ் நாட்டார் அல்லர். இந்தியரும் அல்லர்! மேல் நாட்டைச் சேர்ந்தவர். இன்பங்களை அங்கே வழங்கப்பெற்றிருக்கக்கூடும். வழங்கப்படாதவைகள், தேவைப்படாதவைகளாகவும் இருக்கக்கூடும். இங்கே?

> 'இன்பம் என்று சொல்லக் கேட்டதுண்டு—அது இருக்கும் இடத்தை அறிந்ததில்லை''

என்று பொருள்படும் வகையில் ஒரு பாடலே பிறந்திருக்கிறதல்லவா இந்த நாட்டில்! எத்தனையோ இன்பங்கள் வழங்கப்பட்டிருந்தால் சரி. இல்லையே இங்கு! ஒருசில வற்றைப் பறித்துப் பயன்படுத்துகிறோம்! வழங்கப்படாதன பல. வேண்டிக்கொண்டிருக்கிறோம் நாம்!

இன்பங்களை விருந்துக்கு ஒப்பிட்டுக் காட்டக் கூடிய எபிக்டெடசின் நிலைவேறு; எடுத்துக்காட்டிய

(13-ம் பக்கம் பார்க்க)

# "பத்து லட்சம்" பக்தசீலர்!

[ கடலூர்—இராமையன் ]

[சென்னி நாட்டு மன்னர் பக்தசீலரின் அரசவை. மன்னர் அவைக்கு வருகிறார். அமைச்சர்களும் மற்றையோரும் எழுந்து நிற்கிறார்கள்.]

தளபதி:- மன்னர் பக்தசீலர்!

அவையோர்;- வாழ்க!

தளபதி:- மாமன்னர் பக்தசீலர்!

அவையோர்:- வாழ்க! வாழ்க!!

[மன்னர் அரியணையில் அமர்கிறார். காவலன் ஒருவன் ஓடோடி வந்து அரசரை வணங்குகிறான்.]

காவலன்:- வணக்கம் வேந்தே! மத்திய நாட்டு மன்னர் அழகேச பூபதி அவைக்கு வந்துகொண்டிருக்கிறார்.

பக்தசீலர்:- மிக்க மகிழ்ச்சி! தக்க மரியாதைகளுடன் மன்னரை அழைத்து வாருங்கள்.

[காவலன் விடை பெற்றுச் சென்ற சற்றைக்கெல்லாம் மத்திய நாட்டு மன்னர் அழகேச பூபதி அவைக்கு வருகிறார். மன்னர் பக்தசீலர் எழுந்து சென்று எதிர் கொண்டழைக்கிறார்.]

பக்தசீலர்:- வரவேண்டும்! வரவேண்டும்! நீண்ட நாட்களுக்குப் பிறகு இன்றுதான் தங்களின் பாதம் எமது அவையில் படக் கொடுத்து வைத்திருக்கிறது......

அழகேசபூபதி:- வரக்கூடாது என்ற எண்ணம் எனக்குக் கிடையாது. எல்லைத் தகராறு தீர்ந்தவுடனேயே வரவேண்டும் என்றுதான் நினைத்தேன். அதற்குள் மொழித் தகராறும் ஏற்பட்டுவிட்டதால் நாட்டைவிட்டு வெளியே செல்வது அவ்வளவு நல்லதாக எனக்குப் படாததினால் தான் வரமுடியவில்லை. இன்று தான் தங்களைக் காண எனக்கு வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது.

[அரசவைக் கவிஞர் கோப்பையூரார் அவைக்கு வருகிறார்.]

கோப்பையூரார்:- ஒரே மரம்! இரண்டு பொந்தை!!

அழகேச:- கவிஞர் கோப்பையூரார் சொல்வதை என்னால் அறிந்து கொள்ள முடியவில்லை.

கோப்பை:- எங்கள் மன்னர் பக்தசீலரின் பிறந்தநாளாகிய இன்று தாங்கள்எங்களின் அவைக்குவருகைதந்ததை முன்னிட்டு எங்கள் மன்னரை, வாழ்த்தவும், கண்டு பேசவும் வாய்ப்புகிடைத்துவிட்டதல்லவா......

[அனைவரும் சிரித்தல்...]

அழகேச:- மன்னர் பக்தசீலருக்கு இன்று பிறந்தநாளா...!?

கோப்பை:- என்ன இப்படி ஆச்சரியத்துடன் வினா எழுப்புகிறீர்கள்? எங்கள் நாட்டு மன்னர் என்பதை விட தங்களின் ஷட்டகர் என்ற உறவுமுறை மிகவும் நெருக்கமான தாயிற்றே!

அழகேச:- பக்தசீலர் எனது சகலர் என்பதை யான் மறுக்க முடியாத ஒன்றுதான். ஆயின் அவருடைய பிறந்தநாளை யான் அறிந்துவைத்திருக்கவேண்டும் என்பது நியாயமில்லையல்லவா?

பக்த:- அதிகம் ஏன்? இன்று நான் பிறந்தநாள் என்பது எனக்கேத் தெரியாது!

அமைச்சர் பூவராசர்:- இன்று தங்களின் பிறந்தநாள் என்பதை ஒரு திங்களுக்கு முன்பே கவிஞர் கோப்பையூரார் எங்களுக்கு முன் எச்சரிக்கையுடன்கூறிவிட்டதால் இன்று நாட்டில் மன்னரின் பிறந்தநாள் மிகவும் கோலாகலமாகக் கொண்டாடப்படுகிறது- நம் நாட்டிலுள்ள எல்லாக் கோவில்களிலும் மன்னர் நீடு வாழவும், அவரின் ஆட்சி மேலும் சிறக்கவும் வழிபாடுகள் நடைபெறுகின்றன......

பக்த:- எனக்குத் தெரியாமலேயே இத்தனைச் சிறப்பாக நாடு விழாக் கொள்கிறதா! கவிஞர் கோப்பையூராரை நான் என்றுமே மறக்க முடியாது!

பூவராசர்:- கோப்பையூரார் எந்த காரியத்தில் ஈடுபட்டாலும்கொஞ்சம் சுயநலம் இருக்கத்தான் செய்யும்......

கோப்பை:- அமைச்சரே என்னைக் குறைகூறுவதே தங்களின்பிழைப்பாக வைத்திருக்கிறீர்!

பூவராசர்:- தவறாக நினைக்காதீர்கள்! அடுத்தக்கிழமை தங்களின் பிறந்தநாள் வரவிருக்கிறது- அன்றுநாடுவிழாகொள்ளவேண்டுமென்று தாங்கள் மறைமுகமாகச் செய்யும் எல்லாக் காரியங்களும் எனக்குத் தெரியாமலாப் போய் போய்விடும்.

பக்த:- கோப்பையூராரின் பிறந்தநாளைக் கொண்டாட நாடு கொடுத்து வைத்திருக்க வேண்டும்! அமைச்சரே! அடுத்தக் கிழமை கவிஞரின் பிறந்த நாளை நாடே மிக விமரிசையாகக் கொண்டாடவேண்டிய ஏற்பாடுகளை இன்றே கவனியுங்கள்.

கோப்பை:- வேண்டாம்......வேண்டாம்...அந்த அளவுக்கு எனக்குத் தகுதி ஏற்பட்டுவிடவில்லை...

பூவரா:- அப்படிச் சொல்லாதீர்கள்! சமயத்தைப் பயன்படுத்திக்கொள்ளுங்கள்!

கோப்பை:- நீர் மட்டுமென்ன? சமயத்தைப் பயன்படுத்தி அமைச்சரானவர்தானே......?

பூவரா:- வம்புக்கு இழுக்கிறீர் என்னை. உம் யோக்கியதை என்னவாம்? காஞ்சி நாட்டார் அரசவைக் கவிஞராக இருந்து வந்தத் தாங்கள் எப்படி சென்னி நாட்டுக் கவிஞரானீர் என்பதை நாடு மறந்திருக்குமென்று நினைக்கிறீர்?

கோப்பை:- காஞ்சி நாட்டாரின் போக்கு — குறிப்பாக தமிழ் மொழிக்கு உரிய அந்தஸ்து கொடுக்கத் தவறியதுதான்......

பூவரா:- (சிரித்தபடி) காஞ்சி நாட்டாரைவிடவா இந்த சென்னி நாட்டில் தமிழ்மொழிக்கு சிறப்பு

**படுக்கையிலிருந்து திடீரென எழுந்தார் திருவாளர் முன்னுள். காரணம் வினவினர் அவரின் துணைவியார். எப்படிச் சொல்வார்? தூக்கத்திலாவது நிம்மதி இருந்தால்தானே!**

# காஞ்சி

## அறிஞர் அண்ணா

அவர்கள்

எழுதும்

முப்பாலும் முக்கனியும் கலந்த
முத்தமிழ்க் காவியங்கள்!

இயலில்—இசையில்—கூத்தில்

கதைகள்! கட்டுரைகள்!

அத்துடன்

அமைச்சர்கள்,
முன்னணித் தலைவர்கள்
தரும் அரசியல் விளக்கங்கள்!

கவிதைகள்! கார்டூன்கள்!
துணுக்குகள்!!

எல்லாமாகச் சேர்ந்த
இலக்கியத் தொகுப்பு!
எழிலான படைப்பு!

விலை ஒரே ரூபாய்தான்!

## 3-ம் ஆண்டு மலர்!


கிடைக்கிறது? உம்முடைய போக்கு அவர்களுக்குப் பிடிக்காததால் உம்மை அவையைவிட்டு வெளியேற்ற முயற்சித்த சமயத்தில், தாங்களாகவே சென்னி நாட்டில் தஞ்சம் அடைந்தச் செய்தி இன்னும் என் நினைவை விட்டு நீங்கவில்லையே......

கோப்பை:- அவமானம் ... அவமானம்...மன்னருக்கு மாபெரும் அவமானம்...

பக்த:- கவிஞரே! என்ன சொல்கிறீர்?

கோப்பை:- காஞ்சி நாட்டாரைவிட சென்னி நாட்டார் தமிழுக்கு என்ன செய்துவிட்டார் என்ற முறையில் அமைச்சரின் பேச்சு இருக்கிறது. பேசியதோ சென்னி நாட்டு அமைச்சர். அதுவும் சென்னி நாட்டு மன்னர் பக்தசீலனின் எதிரிலேயே ... அவமானம் ...அவமானம்...

பூவரா:- சென்னி நாட்டிற்கு இன்று தானா அவமானம் ஏற்பட்டது? என்று தாங்களும், உம்முடன் சிலரும் இங்குவந்து தஞ்சமடைந்தீர்களோ—உங்களை இந்த அரசவை ஏற்றுக் கொண்டதோ அன்றே இந்த நாட்டிற்கு...

பக்த:- நிறுத்துங்கள் உங்கள் சர்ச்சையை...!

அழகேச:- இன்று உங்களிருவரின் தர்க்கத்தைக் கேட்கக் குழுமியிருக்கிறோமா, அன்றி மன்னரின் பிறந்த நாளைக் கொண்டாடவிருக்கிறோமா?

தளபதி:- மன்னரின் பிறந்த நாளைக் கொண்டாடும் முதல் நிகழ்ச்சியாக நாட்டு மக்களின் வாழ்த்துக்களையும், வணக்கத்தையும் தெரிவிக்கும் வகையில் பத்து லட்சம் ரோஜா மலர்களை மன்னரின் காலடியில் வைத்து வணங்குகிறேன்.

கோப்பை:- என்ன பொருத்தம்! பக்தசீலர்! பத்து லட்சம்! பத்து லட்சம் பக்தசீலர்! ஆகா...கா... என்ன பொருத்தம்! இன்று முதல் நம் மன்னரை 'பத்து லட்சம் பக்தசீலர்' என்றே அழைக்கலாம்.

தளபதி:- பத்து லட்சம் பக்தசீலர்!

அவையோர்:- வாழ்க! வாழ்க!!

பூவரா:- அடுத்த நிகழ்ச்சியாக நாட்டியம் நடைபெறும்!

பக்த:- நாட்டியம்! சங்கீதம்!! காலட்சேபம்!!! இதுதான் எனக்கு மிகவும் பிடிக்கும்.

விரைவில்! புதிய தொடர்கதை!

எஸ். எஸ். தென்னரசு

எழுதும்

# 'கண்ணாத்தாள்'

ஐம்பது ஆண்டுகளுக்குமுன் முகவை மாவட்டத்தில், செட்டி நாட்டுச் செம்மண் பூமியில், வாழ்ந்து மடிந்த ஒரு சுமங்கலியின் கண்ணீர்ப் பட்டயம்.


பூவரா:- இன்று நம் அவையில் நடனமாட யிருப்பவர் அவைக்குப் புதிது. தென்கோடி நாட்டைச் சேர்ந்தவர். பெயர் பத்மினி!

பக்த:- நாட்டியம் ஆரம்பமாகட்டும்.

[நாட்டியக்காரி பத்மினி நடனமாடி முடித்ததும் மன்னரை வணங்கி நிற்கிறாள்.]

பக்த:- தனது ஆட்டத்தின் மூலம் இந்த அவையையே ஆட்டி வைத்து விட்ட நாட்டியக்காரி பத்மினிவுக்கு இந்த முத்து மாலையை அன்பளிப்பாக அளிக்கிறேன்.

அழகே:- நாட்டியம் மிக மிகப் பிரமாதம். நீண்ட நாட்களுக்குப் பிறகு இந்த அவைக்கு நான் வருகை தந்ததின் பயனாகவோ என்னவோ அழகான நடனத்தைக் காணக்கூடிய வாய்ப்புக் கிடைத்தது. எமது மத்திய நாட்டின் சார்பில் தந்தத்தாலான அசோக தூபியை பத்மினிவுக்கு அளிக்கிறேன்.

[நீண்டநேர கைத்தட்டல்]

கோப்பை:- இவையனைத்திற்கும் மேலாக நாட்டியக்காரி பத்மினிவுக்கு 'நாட்டியப் பேரொளி' என்ற பட்டத்தைச் சூட்டி இந்த அரசவை கௌரவிக்கிறது. இன்று மன்னர் பக்தசீலருக்கும், மத்திய நாட்டு மன்னர் அழகேச பூபதிக்கும் பிரபுக்கள் சபை அளிக்கும் விருந்தில் நாட்டியப் பேரொளி பத்மினிவும் கலந்துகொள்ள மன்னர் சம்மதிக்க வேண்டும்.

பக்த:- அப்படியே ஆகட்டும்.

பத்மினி:- எப்படி நன்றி கூறுவதென்றே எனக்குத் தெரியவில்லை. இந்த நல்ல நேரத்தில் என் மனதில் பட்டதை வெளியிட அரசர் என்னை அனுமதிக்க வேண்டும்.

பக்த:- உன் எண்ணம் எதுவாயினும் உரைக்கலாம்.

பத்மினி:- இன்று முதல் இந்த சென்னி நாட்டிலேயேத் தங்கி எனது நடனத்தின் மூலம் மன்னரின் கீர்த்தி பற்றியும், அவரின் ஆட்சித் திறன் பற்றியும் பிரசாரம் செய்யலாமென்றிருக்கிறேன்.

கோப்பை:- வரவேற்கத்தக்க செய்தி. நாட்டு மக்களிடத்தில் விஷக் காற்று பரவியிருக்கும் இந்த சமயத்தில் மிகமிகத் தேவையான ஒன்றாகும்.

பக்த:-நாட்டியப் பேரொளியே! உன் முயற்சியை நான் மிகவும் வரவேற்பதோடு, என் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். நீ மேற்கொள்ளும் பிரசாரத்திற்கு ஆகும் செலவுகளனைத்தையும் அரசாங்கமே ஏற்கும்.

பத்மினி:- என்னை வாழ்த்தி விடையளியுங்கள்.

கோப்பை:- பத்மினி! இந்த சமயத்தில் வேறொன்றும் நினைவில் வைத்துக்கொள். பிரசாரத்திற்காக நீ செல்லும் ஊரெங்கும் பெண்களைக் கூட்டி பேரணி ஒன்றும் நடத்தத் தவறாதே!

பத்மினி:- அப்படியே செய்கிறேன் கவிஞரே!

[காவலர்கள் சிலர் உள்ளே வருகிறார்கள்.]

காவலன் 1:- அரசே! நாட்டு மக்களனைவரும் பேரணிப் பூண்டு தங்களைக் காண்பதற்காக அரண்மனை முன்பு கூடியிருக்கிறார்கள்.

கோப்பை:- பேரணிப் பற்றி பேசிக் கொண்டிருக்கும் இந்த சமயத்தில் போரணியா? இருக்கவே இருக்காது! மன்னரை நேரில் கண்டு தங்களின் வாழ்த்துக்களைத் தெரிவிக்கவேண்டி மக்கள் கூடியிருப்பார்கள்.

காவலன் 2:- மக்களைச் சரியாகப் புரிந்து கொள்ளாது பேசுகிறார் கவிஞர். அரண்மனை முன்பு கூடியிருப்பது போரணியேதான்,

பக்த:- விருந்துக்கு நேரமாகிறது. மக்களை இன்று நான் சந்திக்கத் தயாராகயில்லை. மக்களைக் கலைந்துப் போகச் சொல்லுங்கள். மறுத்தால் நம் வீரர்களை விட்டுவிரட்டியடியுங்கள்.

காவலன் 1:- நாங்கள் முன்பே கலைந்து போகும்படி அறிவித்து விட்டோம். மக்கள் உங்களைக் காணாது திரும்பமாட்டார்களாம்.

பக்த:- மக்கள் மறுக்கிறார்கள்! நீங்கள் என்னிடம் உரைக்கிறீர்கள்! வெட்கமாக இல்லையா உங்களுக்கு? முதலில் நீங்கள் இவ்விடத்தை விட்டு வெளியேறுங்கள்.

தளபதி:- மேற்கொண்டு ஆகவேண்டியதை யான் பார்த்துக் கொள்கிறேன். மன்னர் மகிழ்ச்சியுடன் விருந்தில் கலந்து கொள்ளட்டும்.

அழகே:- மக்கள் மேலும் புரட்சி செய்வார்களாயின் எமது மத்திய நாட்டிலிருந்து ஆயிரம் குதிரை வீரர்களை அழைத்துக்கொள்ளுங்கள். இதோ அதற்கான அத்தாட்சி மடல்.

[ஓலையைப் பெற்றுக் கொண்டு தளபதி வெளியேறுதல்.]

பக்த:- போரணியாவது சீரணியாவது! பொடிப்பொடியாக வேண்டாமா?

[வீரர்களையும் மீறிக் கொண்டு மக்களின் பிரதிநிதிகள் சிலர் அரண்மனைக்குள் நுழைகிறார்கள்.]

பக்த:- என்ன இது கூட்டம்? யார் நீங்கள்...??

பிரதிநிதி:- வெகுண்டெழுந்த மக்களை ஒழுங்குபடுத்தி நீதி கேட்க வந்திருக்கும் மக்களின் பிரதிநிதிகள் நாங்கள்.

பக்த:- யார் மக்களின் பிரதிநிதி? இந்த நாட்டு மக்களின் ஏகோபித்த பிரதிநிதியாக நான் இந்த அரசவையில் வீற்றிருக்கும்போது நீங்கள் எப்படி மக்களின் பிரதிநிதியாவீர்கள்?

பிரதிநிதி 2:- செங்கோல் வளையாதிருந்தவரை நீங்கள் பிரதிநிதி!

(10-ம் பக்கம் பார்க்க)

# மோக விழிகள்

—துறவி—

அருகேவா இசைமிழற்று அணைத்துக் கொள்ளு
அஞ்சாதே என்றபடி வண்டு கட்கு
வரவேற்புத் தந்தபடி மலர்கள் கூட்டம்
வனப்போடு நடிக்கின்ற சோலை உள்ளே
திருமன்னன், கத்திமன்னன் அசோகன், பிள்ளை
தர்மவிவர்த் தனன் அமர்ந்து முதிர்ந்த ஞானம்
தருகின்ற சுவடிகளைப் படித்த வாறு
தோபாமல் புற அழகில் அமர்ந்தி ருந்தான்.

கிளிமூக்குப் போல்சிவந்த பூம்பா தத்துக்
கவினூரும் ஒளிச்சிலம்பு ஒலிஇ சைக்க
நெளிகின்ற சிறுத்தஇடை ஒடிந்து விழ
நடமாடி வருகின்ற ஓவி யம்போல்
குளிர்க்காவின் உள்நுழைந்து, ஏட்டின் மீது
கண்பதித்த தர்மவிவர்த் தனன்தோள் மேலே
தளிர்கரத்தால் தொட்டபடி திட்ய ரட்சை
தனிநிலவு முகம்சிவக்க வந்து நின்றாள்!

தர்மவிவர்த்தனன்:-
எத்தனையோ முறைகள்நான் உனக்கு, 'என்னை
இனிமேலும் நினைக்காதே' என்று சொன்னேன்
அத்தனையும் காய்க்காத பூக்க ளைப்போல்
அநியாய மாய்உதிர்ந்து போன தோடி?
பித்தமனம் தெளியாமல் நீயோ என்னைப்
படுக்கையிலே அணைப்பதற்குத் தவிக்கின் றாயே;
முத்துநிலா நெடுவானை மோது தற்கு
முயலுகின்ற பறவைப்போல் முயல்கின் றாய்நீ!

திட்யரட்சை:-
வைதீக மடக்கூட்டம் விதவைப் பெண்ணை
வெறுப்பதுபோல் எனைநீங்கள் வெறுக்கின் றீர்கள்
கைவைத்து என்மீது, கள்ளம் தொட்டுக்
கனிஉதட்டில் பனிமுத்தம் பதித்து நீல
மைபனந்த விழிக்கடையில் மிதக்கும் காதல்
மயக்கத்தைத் தணிப்பதற்குத் தயங்கு கின்றீர்
வெயில்தொட்டு இளகுகின்ற நெய்போல் நானே
வெந்துமனம் கரைகின்றேன் உமைநி னைத்து!

தர்மவிவர்த்தனன்:-
பேதையென உளருகின்றாய் போதை கொண்டு
'படுக்கைமயல்' நினைவுகளை நீக்கு; ஞான
நீதிஉரை அறக்கருத்தில் மூழ்கி மூழ்கி
நீந்துகின்ற என்மனத்தில் தயவு செய்து,
தீதுதரும் காமத்தைக் கலந்து வைத்துத்
தத்தளிக்கச் செய்யாதே தினமும் என்னை
ஈதோடு முடியட்டும் உனது ஆசை
இனிமேலும் என்பற்றி நினைக்கா தேநீ!

திட்யரட்சை:-
அறநூல்கள் படிக்கத்தான் வேண்டும்; ஆனால்
அழகான கன்னியைஏன் வெறுக்க வேண்டும்?
குறைவின்றித் தினந்தோறும் ஆற்றுத் தண்ணீர்
குடித்தாலும், புதுத்தேனைக் குடிப்ப தற்கு
வெறுக்கின்ற மக்களிங்கே யாரும் இல்லை
வாய்என்ன தேன்குடித்தால் கசந்தாபோகும்
நிறைவாகக் கற்றறிந்த உங்க ளுக்கு
நான்மேலும் சொல்வதற்கு என்ன உண்டு?

தர்மவிவர்த்தனன்:-
நீர்வேட்கை தணியாது தேன்கு டித்தால்
நல்லமணம் கொடுப்பதில்லை பூவின் நிழல்
கூராக ஈட்டிமுனை இருந்திட் டாலும்
கவிதைகளைச் சுவடியிலே எழுது மோ சொல்?
ஆராய்ந்து பாராமல் இதனை யெல்லாம்
அற்ப இருள் சுகத்திற்குத் தவிக்கின் றாய்நீ
நேராக இருக்கின்ற வீட்டின் தூலம்
போல் ஒழுக்கம் நெஞ்சத்தில் இருக்க வேண்டும்

[வேறு]

சொல்உரைத்து இவ்வாறு மொழிந்து விட்டுச்
சோலைவிட்டு அகன்றுசென்றான் மன்னன் மைந்தன்
பொல்லாத அனல்காமம் சுட்டெ ரிக்கப்
பனிவிழியில் நீரோடைக் கண்ணீர்ப் பொங்க
செல்லாத காசாக மாறிப் போன
சின்னஇடை திட்யரட்சை காலை நேர
நிலவாக முகம்வெளுத்துச் சோகம் கொண்ட
நினைவையெல்லாம் மெலியவைத்து அசைந்து சென்றாள்

கத்திபினால் தலைகொய்து உலக ஏட்டில்
கரையாத புகழ்ப்பதித்த அசோக மன்னன்
புத்தியிலே பேதலிப்புக் கொண்டு, ஆண்டு
பலகடந்து முதுமைதனை அடைந்த போதும்
நித்திரையில் துணையோடு இருப்ப தற்கு
நீலவிழிப் புதுப்பெண்ணைத் தேட லானான்
கத்துகடல் அலைநுரையாய் நரைத்த மன்னன்
கவனத்தில் திட்யரட்சை மின்னி நின்றாள்.

அத்தாணி மண்டபத்தில் ஒருநாள் மன்னன்
அழகுநங்கை நாட்டியத்தில் ஆழ்ந்தி ருந்தான்
சுத்தமுள்ள பொன்எடுத்து உருக்கி மின்னல்
சுடர்கொடியைப் பொடிசெய்த துகள்கு ழைத்து
வித்தைமிகக் கற்றறிந்த கலைஞன் செய்த
விழிமயங்கும் சிலையாகத் திட்ய ரட்சை
கொத்துகின்ற கொலைவிழியில் மோகம் தேக்கிக்
கோமகனின் முன்அசைந்து சென்றாள் நாணி!

ஆடலினை ரசித்திருந்த மன்னன் கண்ணை
அழகியவள் சென்றதிசை ஓட்ட லானான்
நாடாளும் செங்கோலை ஏந்தும் கையால்
நங்கையவள் நுண்ணிடையைப் பிடித்துப் பார்க்க
வாடலுற்று அனலானான் நெஞ்சம் மங்கை
வாய்எச்சில் பனிச்சுவையைப் பருகு தற்குத்
தேடினான் பலவழியை! இரவுத் தூக்கம்
தோகையொடு கழிப்பதற்கு ஆசை கொண்டான்.

அலங்கரித்த தேர்போல்செந் தாம ரைப்பூ
ஆடைகட்டி வந்ததுபோல் காட்சி தந்த
மலர்மங்கை திட்யரட்சை, வீரன் வீசும்
அம்புவிழி பார்வையிலே போதை யேற்றி
கோலைக்கத்தி ஏந்துமன்னன் மயங்கும் வண்ணம்
குமிள்சிரிப்பு வலைவிரித்து, 'நெடுவா னம்போல்
நிலையாகப் பொலிந்திடுமோ உங்கள் அன்பு?'
நளினமொடு கேட்டபடி அடியில் சாய்ந்தாள்.

'வற்றுவதே இல்லைகடல் தண்ணீர், நீண்டு
வானிடிக்கும் பனிஇமயம் அழிவ தில்லை
உற்றுஉற்றுப் பார்க்கவைக்கும் அழகு கொண்ட
உன்மீது நான்கொண்ட அன்பும் என்றும்
சிற்றேனும் குறையாது! அழிந்தோ டாது
சிறிதேனும் ஐயமில்லை' எனமொ ழிந்து
பொற்சிலையைக் கிழக்கரத்தால் இழுத்த ணைத்துப்
பஞ்சணையின் அகல்விளக்கை ஓய விட்டான்.

மஞ்சத்தில் கொஞ்சுதற்கு திட்ய ரட்சை
மங்கையினை மணம்முடித்துக் கொண்ட மன்னன்
அஞ்சவில்லை. நாணவில்லை வயது மூத்தும்
அணைப்பதற்கும் துணையோடு துயில்வ தற்கும்
கொஞ்சுதற்குத் துடித்திட்ட பருவ நங்கை
கோமகனின் சிறைப்பறவை ஆன தாலே
நெஞ்சமெல்லாம் அமைதியுற மகிழ்ந்தான். நாளை
நாடாளப் போகின்ற மன்னன் பிள்ளை.

சுடர்மூச்சு விடுகின்ற அகலின் பக்கம்
சுவடிகளைப் படித்தபடி அமர்ந்தி ருந்தான்
தடியூன்றி நடக்கின்ற அசோக மன்னன்
தனியாசை கொண்ட மன்னன், கல்விச் செல்வன்!
திடுமென்று வளையொலிக்கும் சப்தம் கேட்டுத்
திடுக்கிட்டுத் தர்மவிவர்த் தனன் தன் கண்ணை
நெடுங்கதவு வாசலுக்கு ஓட விட்டான்
நின்றிருந்தாள் திட்யரட்சை மயக்கத் தோடு!

[ வேறு ]

தர்மவிவர்த்தனன் :-

தித்திப்புத் திருமணத்தை முடித்த பின்பும்
தப்புவழிப் பயணத்தை விரும்ப லாமா?
எத்தனையோ முறைஉனக்குச் சொல்லி விட்டேன்
என்றாலும் நீஎன்னை மறப்ப தற்கும்
சுத்தமொடு வாழ்வதற்கும் முயன்றி டாமல்
சிற்றின்ப இச்சையொடு தவிக்கின் றாயே
சத்திரமா நீ?பலபேர் குடிஇ ருக்க
சிறிதேனும் நினைத்தாயா இதனை யெல்லாம்?

மனத்தைவிட்டு விரட்டிவிட்டு வெட்கந் தன்னை
மஞ்சத்து போதையிலே தவறு கின்றாய்
நினைவெல்லாம் என்மீதே ஓட்டு கின்றாய்
நான்உனக்கு மகனாக ஆன போதும்!
பனைமரத்து ஓலையைப்போல் மாறு தேநீ
பசுந்தாழை மடல்போன்று மணக்க வேண்டும்!
இனிமேலும் என்மீது விருப்பம் கொண்டு
எனைத்தேடி வரவேண்டாம் ஒழுக்கம் கெட்டு

திட்யரட்சை:-
பிரிக்காத புத்தகம்நான் எனைப்பி ரித்துப்
படிப்பதற்கே இளமைஎன்ற கல்வி வேண்டும்
நரைத்துவிட்ட மன்னருக்கோ இப்ப டிப்பு
நிறைவில்லை அணுவளவும்; என்ன செய்வேன்?
சரியான துணைஎனக்கு நீதான்; உன்றன்
சரீரந்தான் இனிஎனக்குத் தேவை; இன்னும்
உரிக்காத பலாப்பழம்நான் உரித்து நீங்கள்
உண்ணுங்கால் உதட்டாலே குளிர்வீ ருங்கள்.

பருவத்தால் செம்மாந்த என்ற மேனி
பெற்றுள்ள அங்கமெல்லாம் தேனின் தேக்கம்
நெருங்கிவந்து பாருங்கள் உங்கள் நெஞ்சில்
நிரம்பியுள்ள வெறுப்பெல்லாம் மறைந்து போகும்
சுருங்கியுள்ள இடைதொடுங்கள் இதழின்மீது
சுகமுத்தம் விதையுங்கள், தடையே இல்லை
விரும்புகின்ற படியெல்லாம் என்னை அள்ளி
விளையாடி மகிழுங்கள் துய்த்தி ருங்கள்!

இளமைக்கு இளமையே தேவை! இன்னும்
எத்தனைநாள் நான்சகிப்பேன் 'இரவின் நோவை'
குளத்தினிலே சொற்றுதவளை வசித்திட் டாலும்
குடிப்பதுண்டோ தாமரைப்பூ வழங்கும் தேனை.
விளக்கொளியை கொன்றுவிட்டு மஞ்சம் மீது
விளையாட்டுத் திடலாக்கி என்னை நீங்கள்
விளையாடத் துவங்குங்கள் இனிப்பு முத்தம்
விதையுங்கள்! இனிமேலும் தயங்க வேண்டாம்!

தர்மவிவர்த்தனன்:-
நதிவெள்ளம் அங்குமிங்கும் ஓடும். அன்னம்
நடைப்பழகும் குளத்தின்நீர் அவ்வா றில்லை
இதழ்விருந்து பலருக்கும் படைக்கும் வேசி
இனம்அதுபோல் அலைவதுண்மை! மன்னர் கண்ணில்
பதிந்துவிட்ட பின்போநீ குளத்தின் நீர்போல்
பாயாமல் கண்டபடி, வாழ வேண்டும்!
எதைக்கண்டு என்னிடத்தில் மோகம் கொண்டு
இவ்வாறு மனம்மாற தவிக்கின் றாய்நீ?

திட்யரட்சை:-
துடிப்புத்தான் படகோட்டும்! வைரம் கீறித்
துண்டாக்கும் கண்ணாடி தன்னை! என்றன்
உடம்பெல்லாம் சுடுகின்ற அனல்கா மத்தை
உன்இளமை தேகம்தான் தணித்து வைக்கும்
முடியாத ஆசைகளைத் தூண்டும் உங்கள்
மோகவிழிப் பார்வையினைப் பார்த்துத் தான்நான்
அடங்காத காதல்உம் மீது கொண்டேன்
அணையுங்கள் காரணத்தைக் கூறிவிட்டேன்!

தர்மவிவர்த்தனன்:-
அறிவுரைக்கும் சுவடிகளைப் படிப்ப தற்கு
அடைத்துள்ள எனதிரண்டு விழிக ளாஉன்
நிறைதவற காரணம்?மோ கத்தை நெஞ்சில்
நெருப்பாக ஏற்றியதென் விழிகள் தானு?
முறைதவற வைத்திட்ட எனது கண்கள்
மூடட்டும்! ஒளிஇழக்கட் டுமெனக் கூறி
உறைவிடுத்த வாள்ஒன்றைக் கண்ணி ரண்டின்
உள்நுழைத்துத் தரைவீழ்ந்தான் அசோகன் பிள்ளை!

7-ம் பக்கத் தொடர்ச்சி

இன்றே வளைந்துவிட்ட செங்கோலை வில்லாக்கி கொடுமையெனும் அம்பைக்கொண்டு நாட்டு மக்களை வேட்டையாடத் துணிந்து விட்டபின் நீங்கள் எப்படி பிரதிநிதியாவீர்கள்? காட்டாட்சி முறை! கண்மூடி தர்பார்!!

கோப்பை:- என்ன? காட்டாட்சி முறையா?

பிரதிநிதி:- இதிலென்ன சந்தேகம்? சான்றுகள் பல வேண்டுமா?

கோப்பை:- பல வேண்டாம்? ஒன்று கூறுங்கள்!

பிரதிநிதி:- மக்களனைவரும் அரை வயிற்றுக் கஞ்சிக்கும் காற்றுகப் பறக்கும்போது, மன்னரின் பிறந்த நாளைக் கோலாகலமாகக் கொண்டாட வேண்டுமென்று காவலர்களின் மூலம் கட்டளையிட்டு துன்புறுத்தப்படுகிறுர்களே இது எம்முறையில் நீதி?

கோப்பை:- மக்களுக்கு ஆயிரம் தொல்லைகள் இருக்கும். ஆயின் மன்னர் ஒருவர்தானே! அவருடையப் பிறந்த நாளும் வருடத்திற்கு ஒரு முறைதானே! இதைக் கூடவா மக்கள் மகிழ்ச்சியுடன் கொண்டாடக் கூடாது?

பிரதிநிதி:- கொண்டாடலாம் வாழ்வு சிறந்திருந்தால்!!

பிரதிநிதி:- மன்ருடுகிறுர்கள் உயிரோடு மக்கள்! கொண்டாட வேண்டுமாம் கோலேந்தியின் பிறந்த நாளை!!!

கோப்பை:- நாடு கெட்டுவிட்டது. மன்னரின் பிறந்த நாளைக் கொண்டாடவும் எதிர்ப்பு!

பிரதிநிதி:- மன்னரின் பிறந்த நாளைக் கொண்டாட நாங்கள் எதிர்ப்புக் காட்டவில்லை மக்கள் வாழ் விழந்து நிற்கும் இந்த சமயத்தில் இப்படிபொரு விழா வேண்டுமா?—அதுவும் மக்களைத் துன்புறுத்தி?

கோப்பை:- நல்ல காரியத்திற்காக மக்கள் துன்பப்படுவது சட்டப்படி குற்றமல்லவே!

பிரதிநிதி:- கோப்பையூராரே! நீங்களா சட்டத்தைப்பற்றி பேசுகிறீர்?—அதுவும் மது மயக்கத்தில் இருந்தபடி...கவிஞரே! நம் நாட்டில் மது உட்கொள்வதும் சட்டப்படி குற்றமல்லவா?

கோப்பை:- ஆமாம்......

பிரதிநிதி:- அப்படியிருக்க நீர் மட்டும் மது மயக்கத்திலிருப்பது எப்படி நியாயம்? இது எந்த வகைச் சட்டம்?

பக்த:- மது அருந்தினுல்தான் மயக்கம் வரும். மயக்கம் வந்தால்தான் கண்டபடி எழுத முடியும்! ஆகவேதான் கவிஞர் கோப்பையூரார் என்றும் எப்பொழுதும் மயக்கத்திலேயேயிருக்க யான் அனுமதித்திருக்கிறேன்.

பிரதிநிதி:- நல்ல சட்டம் நல்ல நீதி!

பக்த:- நீதியைப்பற்றி நீ பேசவேண்டாம்.

பிரதிநிதி:- நாங்கள் என்ன பேசுவது? இன்று இந்த நாடே பேசுகிறது! நாளை இந்த உலகமே பேசப்போகிறது!

கோப்பை:- யார் முன்பு பேசுகிறுய் என்பதை நினைத்துப் பேசும்.

பிரதிநிதி:- எங்கு பேசுகிறேம்—எப்படிப் பேசுகிறேம் என்பதைத் தெரிந்துதான் பேசுகிறேம். அதிகம் ஏன்? பாதிக்கப்பட்ட மக்களின் சார்பில் கேட்கிறேம், பதில் கூறுங்கள். மன்னரின் பிறந்த நாளைக் கொண்டாட வசதியில்லாத மக்களை வாட்டி வதைத்தது எவ்வகையில் நியாயம்? தங்களின் முடியாத நிலையை எடுத்துக் கூறிய அப்பாவி மக்களின் ஓலைக் குடிசைகளைத் தீக்கிரையாக்கியது எந்த வகை நீதி? பதில் கூறுங்கள் கவிஞரே! பதில் கூறுங்கள்! நீங்கள் கூறவேண்டாம்! மயக்கத்தில் இருப்பீர்கள்! மன்னரே! நீங்கள் கூறுங்கள்! இது எந்த வகை நீதி?

பக்த:- நான் என்ன கூறுவது இது நேரம் எனது படைவீரர்கள் பதில் கூறிக்கொண்டுதானே இருப்பார்கள்!

கோப்பை:- காற்று திசை மாறிவிட்டது என்பதை அறியாத மடையர்கள் இவர்கள் இது. நேரம் மக்கள் தங்களின் தவறுகளை எண்ணி மனம் திருந்தி வீடு திரும்பியிருப்பார்கள்.

[காவலன் வருதல்]

காவலன்:- மத்திய நாட்டிலிருந்து ஆயிரம் குதிரை வீரர்கள் வந்திருக்கிறுர்கள்,

அழகே:- வீரர்கள் வந்துவிட்டார்களா? விரட்டுங்கள் மக்களை! வெட்டி வீழ்த்துங்கள் மதம் கொண்டோரை!

பக்த:- அப்படியே ஆகட்டும்!

அழகே:- பக்தசீலரே! உம்மை மிகவும் பாராட்டுகிறேன். கற்சிலை போல் மனம் கசியாது எல்லா ஏற்பாடுகளையும் செய்கிறீர்கள்!

பக்த:- ஆமாம்...ஆமாம்....வெட்டி வீழ்த்துங்கள் மக்களை......

பிரதிநிதி:- மக்களை வீழ்த்திவிட்ட பிறகு யாரை வைத்துக்கொண்டு ஆட்சி நடத்தப் போகிறீர்கள்?

கோப்பை:- மாட்டை வைத்துக் கொண்டு ஆட்சி நடத்துவோம்! நீ யார் அதைக் கேட்பதற்கு? யாரங்கே? இவர்களைக் கைது செய்யுங்கள்!

தளபதியையும் மற்ற முக்கிய வீரர்களையும் கயிற்றினுல் கட்டி இழுத்துக் கொண்டு மக்களின் ஒரு பகுதி அரண்மனைக்குள் வருகிறது.]

மக்களில் ஒருவன்:- மாடு சுடுகாடு நடை போட்டுவிட்டது. அதோ உதயசூரியன் உத்வேகத்துடன் எழுந்துவிட்டான்!

கோப்பை:- என்ன அக்ரமம்? தளபதியையா மக்கள் கட்டியிழுத்து வருகிறுர்கள்?

பிரதிநிதி:- காற்று திசைமாறிவிட்டதுஎன்றீரே கவிஞரே! பார்த்தீர்களா மக்கள் சக்தி யார் பக்கம் இருக்கிறது என்பதை! கோப்பையூராரே! எங்கே நழுவப் பார்க்கிறீர்?

[மக்கள் மன்னரையும், மற்றவர்களையும் சூழ்ந்து கொள்கிறுர்கள்.]

பக்த:- கொடுமை...கொடுமை......

பிரதிநிதி:- உங்களைக் கொடுமைப் படுத்தவேண்டுமென்பது எங்கள் நோக்கமல்ல! மக்களாட்சி அமைவதற்கு நீங்கள் தடைக்கற்களாக இருக்கவேண்டாம் என்றுதான் கூறுகிறேம்.

மக்கள்:- மன்னர் பதவி துறக்கட்டும்! மக்களாட்சி மலரட்டும்!!

பக்த:- அரச வாழ்வு! அரியணை சுகம்! அந்தஸ்து மிக்க ஆடம்பர வாழ்க்கை! இத்தனையுமின்றி எப்படி வாழ்வேன் நான்? ஐயகோ... கொடுமை...கொடுமை... பழரசக் கோப்பை! பளிங்குநிகர் பணிப் பெண்கள்! எக்காலம் இவை யென்னை எதிர்கொண்டு வரவேற்கும்? முடி போயிற்று! எனைச் சூழ்ந்திருந்தப் படை போயிற்று! முழு நிலவே! எனதுயிர் நாட்டியப் பேரொளியே! நீயுமா எனை விட்டுப் போகவேண்டும்?

[மன்னர் பக்தசீலர் மயக்கம்போட்டு கீழே விழுகிறுர். மத்திய நாட்டு மன்னர் அழகேச பூபதியும், பத்மினுவும் செய்வதறியாது விழிக்கின்றனர். கோப்பையூரார் மக்களிடம் மன்னிப்புக்கேட்கிறுர். மக்களாட்சி மலர்கிறது. —திரை.]

## 3—23
## இரத்தம் பீறிட்டது!

கைது செய்வதா? என்னையா? எதற்காக ஒற்றர் நாயகமே?' என்று பதைபதைத்துப் போய் மாரிமுத்து கேட்டான்.

'உன் மனச்சாட்சியைக் கேள் — இந்தக் கேள்விக்குப் பதில் கிடைக்கும்......மாரிமுத்து, என்னை ஏமாளி என்று எண்ணிவிடாதே! அஞ்சலையிடம் நீ என்ன சொல்லிவிட்டு வந்தாய்? அதை நான் கேட்கவில்லை என்று நினைத்துக்கொண்டாய்? வெறும் நடிப்பை நம்பியே, அதிக நாட்களுக்கு வாழ்ந்துவிட முடியாது! சில நாட்களாகவே உன் நடத்தையில் நான் சந்தேகப்பட்டு வந்தேன்! அந்தச் சந்தேகம் இன்று உண்மையாயிற்று!' என்று தூமகேது பார்வையில் சூடேற்றிச் சொல்லிவிட்டு, பல்லக்கினுள் ஏறினான்.

'சோழ மன்னரிடமிருந்து ஓலை! ஒருவேளை எனக்கு வந்த ஓலை, குலசேகரனிடம் சிக்கிவிட்டிருக்குமோ? அதனால்தான் அவன் அவ்வளவு சீற்றத்தோடு இருக்கிருனே?' என்று பல்லக்கில் சென்றுகொண்டிருந்தபோது அவனுக்கு ஏற்பட்ட குழப்பம் அரசனை நேருக்கு நேர் பார்த்தபோது இன்னும் அதிகமாயிற்று.

'வாருங்கள் ஒற்றர்நாயகமே!' என்று கோபங்கலந்த குரலில் குலசேகரன் வரவேற்க தளபதி பாண்டியராசன் புருவத்தை உயர்த்திப் பார்க்க — தூமகேது நிலைமையைப் புரிந்துகொண்டான்.

'இந்த ஓலையை அனுப்பியிருக்கிருர், சோழ மன்னர்!' என்று குலசேகரன் அலட்சியத்தோடு கையிலிருந்த ஓலையைக் காட்டிப் பேசினுன்.

'ஓலையில் என்ன செய்தி அனுப்பியிருக்கிருர்!' என்று தூமகேது சிறிது கலக்கத்தோடு கேட்டான்.

'இதோ நீரே படித்துப்பாரும்!' என்று குலசேகரன் ஓலையை அவனிடம் தந்தான்.

ஆர்வத்தோடு அந்த ஓலையை வாங்கி அவசரமாகத் தூமகேது படித்தான்.

அந்த ஓலை தனக்கு எழுதியதல்ல, குலசேகரனுக்கு எழுதியது என்பதைக் கண்டதும், அவன் உள்ளத்தில் சுற்றிக்கொண்டிருந்த அச்சம் ஓடி மறைந்தது. தைரியமும், தன்னுல் அந்த நிலைமையைச் சுலபமாகச் சமாளிக்க முடியும் என்ற துணிச்சலும் அவனுக்கு ஏற்பட்டன. ஆகவே அவன் முகத்தில்

தோன்றியிருந்த வியர்வையைத் துடைத்துக்கொண்டு, அரசனை நிமிர்ந்து பார்த்தான்.

'படித்தீரா?' என்றவாறு பக்கத்திலிருந்த ஆசனத்தில் மன்னன் உட்கார்ந்தான்.

'ஆமாம், படித்தேன்!' என்று அரசன் அமர்ந்திருந்த ஆசனத்தின் அருகே வந்தபடி தூமகேது கூறினுன்.

'பார்த்தீரா, உமது சோழ மன்னரின் தைரியத்தை?'

குலசேகரனின் இந்தக் கேள்வி, தூமகேதுவைத் திடுக்கிடச் செய்தது. எந்த இராஜாதிராஜ சோழனின் தயவினுல் மணிமகுடம் பெற்ருனே, அதே மன்னனை அலட்சியத்தோடு பேசும் அளவிற்கு குலசேகரன் துணிந்துவிட்டான் என்பதைக் கண்டதும், அவனுக்கு அச்சங்கூட உண்டாயிற்று. ஆனுல் உள்ளத்தில் பீறிடும் உணர்ச்சிகளை வெளிக்குக் காட்டிக்கொள்ளாமல், அவன் நிதானமாகவே பேசினுன்.

'நீங்கள் நினைப்பதைப்போல இந்த ஓலையில், அவ்வளவு பெரிய செய்தி ஒன்றுமில்லையே?'

பெரிய செய்தி என்ருல், இருபது முப்பது பக்கங்கள் எழுதியிருக்க வேண்டும் என்று நினைக்கிறீர்களா? நான்கே நான்கு வாக்கியங்கள்தான் இந்த ஓலையில்! அவை போதாதா, குலசேகரனுக்குச் சுயமரியாதை இருக்கிறதா இல்லையா என்று எடை போட்டுப்பார்க்க? ஒற்றர் நாயகமே, உமக்குத் தெரியும் அல்லவா, இந்தப் பாண்டிய நாட்டை நான் எப்படி ஆள்கிறேன் என்று? இராசாதிராச சோழனுக்கு அடங்கிய சிற்றரசனுக இருந்து ஆள்கிறேனு—அன்றி சுதந்திர மன்னனுக ஆட்சி புரிகிறேனு?

'ஏன் ஒற்றர்நாயகமே மூடிய வாயைத் திறக்காமல் இருக்கிறீர்கள்?......'

'ஆத்திரமாக நீங்கள் பேசுகிறீர்கள் — அதற்கு நான் என்ன பதில் கூறமுடியும்?'

'நான் சாந்தமாகவே கேட்கிறேன் — என் திருமண விவகாரத்தில் குறுக்கிட சோழ மன்னருக்கு என்ன உரிமை இருக்கிறது? திருமேனியை நான் அவரது சம்மதமின்றி திருமணம் செய்துகொண்டேனும்—ஆகவே மதுரை அரண்மனையினுள் அவள் நுழையக்கூடாதாம்—சோழநாட்டு வேந்தரின் ஓலை இவ்வாறு எனக்குக் கட்டளையிடுகிறது! இவ்வாறு உத்திரவிட—என் மனைவி எனது அரண்மனையினுள் நுழைவதைத் தடுக்க — அவருக்கு என்ன உரிமை இருக்கிறது? பாண்டியநாடு என்ன, சோழ நாட்டிற்குக் கப்பம் செலுத்தும் சிற்றரசா? அல்லது திருமணம் செய்துகொள்ளும்போது தங்களது சம்மதத்தைப் பெற்றே செய்துகொள்கிறேன் என்று அவருக்கு வாக்குறுதி தந்திருக்கிறேனு? என்ன ஒற்றர் நாயகமே, நான் கேட்பது ஒன்றுக்கும் பதில்கூருமல் மௌனமாக இருக்கிறீர்கள்?'

'நான் ஏதாவது அபிப்பிராயம் தெரிவித்தால், தாங்கள் கோபித்துக்கொள்ள மாட்டீர்களே?'

'சொல்லுங்கள்!'

'இழந்த அரசைத் தாங்கள் திரும்பவும்பெற, சோழமன்னர் உதவி செய்திருக்கிறார் அல்லவா?'

'ஆமாம்!'

எந்த நிபந்தனையின்மீது தங்களுக்கு உதவிபுரிய அவர் முன்வந்தார்? சைவசமயத்தை தாங்கள் பின்பற்றுவதாகவும் பாண்டிய மண்டலத்தில் சைவத்தைப் பரப்புவதாகவும் — தாங்கள் இசைந்த பிறகுதானே, வாக்குறுதி தந்ததின் பேரில்தானே, தங்களுக்குப் பக்கபலமாகத் தம் படைகளை அனுப்பினார்?'

"அதை இல்லை என்று, இன்றும் நான் கூறவில்லையே!"

"இந்தத் திருமணத்தால், அந்த ஒப்பந்தம் மீறப்பட்டதாக, அவர் கருத இடம்இருக்கிறது அல்லவா?"

"அதெப்படி கருதமுடியும்; நான் இன்னமும் சைவனாகத்தானே இருந்துகொண்டிருக்கிறேன்! சிவநெறி பரவுவதற்கான ஆதரவுகளைத் தாராளமாகத் தந்துகொண்டுதானே இருக்கிறேன்! அப்படியிருக்க திருமேனியை நான் திருமணஞ்செய்து கொண்டதால், அந்த ஒப்பந்தத்தை மீறினேன் என்று நினைக்கவோ— இனிமேல் மீறுவேன் என்று யூகிக்கவோ — எப்படி முடியும்?" என்று பாண்டிய மன்னன் உட்கார்ந்திருந்த இடத்தைவிட்டு எழுந்தான்.

"நிலைமையை நான் சிறிது விளக்கமாகக் கூறினால், தங்கள் சீற்றம், அதிகமானாலும் ஆகும். ஆனாலும் என் கடமையிலிருந்து, நான் தவற நினைக்கவில்லை! மனத்தில் என்ன தோன்றுகிறதோ மறைக்காமல் அதை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் சொல்லியே ஆகவேண்டும்! அரசே, இலங்கை இளவரசியாரைத் தாங்கள் சோழ மன்னரின் அனுமதி பெற்ற பிறகே மணந்திருக்கவேண்டும்......கோபமாகப் பார்க்காதீர்கள் —கொஞ்சம் மனத்தில் வாங்கிக் கொள்ளுங்கள், நான் சொல்வதை! சைவரான தாங்கள் — சைவநெறியைப் பரப்ப வேண்டிய தாங்கள்— பௌத்த மதத்தைச் சேர்ந்த ஒரு அம்மையாரை மணந்துகொள்ளலாமா? உண்மையான ஒரு சைவர் அப்படி செய்யத் துணிவாரா? காதல் கொண்டுவிட்டேன்—காதல் எல்லாக் கட்டுப்பாடுகளையும் தூள் தூளாக்கும் சக்தி வாய்ந்தது"என்று நீங்கள் கூறலாம்! ஆனால் அந்தக் கூற்றை நானோ, அல்லது சிவ தொண்டாற்றவேண்டியே இந்த உலகில் பிறந்திருப்பதாக எண்ணும் சிலர்களோ ஒத்துக்கொள்ளமாட்டோம்! நாட்டை ஆளும் அரசரே பௌத்த அணங்கை மனைவியாக ஏற்றால், சாதாரண குடிமக்கள் எவ்வாறு நடந்துகொள்வார்கள்? சைவமாவது பௌத்தமாவது எல்லாம் ஒன்றுதான் என்று நினைப்பார்கள் அல்லவா? அப்படி நினைக்க இடம் தருவதே—சைவத்தின் புனிதத் தன்மையை மாசுபடுத்துவதாகும் அல்லவா?...வேந்தே இந்த அரண்மனையில் உலவ திருமேனியாருக்கு இடம் தந்தாகிவிட்டதென்றால், அரண்மனையினுள் பௌத்தம் உன்னதமான இடத்தைப் பிடித்துவிட்டது என்றுதானே அர்த்தம்? சிம்மாசனத்தில் சரிபாதி இடத்தைப் பௌத்தம் உரிமையாக்கிக்கொண்டது என்றுதானே பொருள்! அரண்மனையிலே அரச குடும்பத்திலே—கௌரவமான ஓர் இடத்தைப் பௌத்த சமயம் பிடித்துவிட்ட பிறகு, சைவநெறிக்கென்றிருக்கும் தனிப்பெருமை, குறையவும் மங்கவும்தானே செய்யும்? ......அரசே! ஒப்பந்தத்தைத் தாங்கள் மீறிவிட்டீர் என்று இராசாதிராச தோழர் நினைப்பதிலும்–நிலைமை மேலும் மோசமாகப் போகாமல் தடுக்க நிபந்தனை விதிப்பதிலும்— என்ன தவறு இருக்கிறது? பதில் சொல்லவேண்டாம் அரசே, சிந்தித்துப் பாருங்கள்!" என்று தூமகேது அடக்கத்தோடு பேசுவதாக நினைத்துக்கொண்டு அகங்கார வார்த்தைகளை அரசன் எதிரே கொட்டிப் பரப்பினான்.

"சோழமன்னர் அனுப்பிய இந்த ஓலையை, என் எதிர்கால வழிகாட்டியாகக் கொள்ளவேண்டும் என்கிறீரா? என் அழகரசி திருமேனியை அரண்மனையைவிட்டு விரட்டியடிக்கவேண்டும் என்கிறீரா? மயான அமைதி நிலவிய என் வாழ்வில், மதுர இசை எழுப்பிய அந்த மாங்குயிலின் கழுத்தை நெரித்துவிட வேண்டும் என்கிறீரா? என் வாழ்வின் மணிவிளக்கை ஊதி அணைத்துவிடவேண்டும்என்கிறீரா? ஒற்றர்நாயகமே! கேளுங்கள்...கவனமாகக் கேளுங்கள்! சைவத்தை நான் விரும்பி ஏற்றுக்கொள்ளவில்லை. சூழ்நிலையும் சுற்றுச்சார்பும் எனக்குத் துரோகம் செய்துவிட்டதால், அந்தத் துன்பக் கேணியில் நான் தூக்கி எறியப்பட்டேன்!"

'சைவமா துன்பக்கேணி?" என்று தூமகேதுவின் நாக்குழற உள்ளம் திடுக்கிட, கால்கள் பின்னால் இரண்டடிகள் எடுத்துவைத்தன.

"அலறாதீர் ஒற்றர்நாயகமே! ஆத்திரத்திற்கு அணைகட்டித்தான் வைத்திருந்தேன்! அந்தஅணையைத் தங்கள் பேச்சு உடைத்துவிட்டது! சைவத்தைத் துன்பக்கேணி என்று மட்டுமல்ல, தூக்குமேடை என்றும் கூறுவேன்! ஒற்றர்நாயகமே உமக்கு

3-ம் பக்கத் தொடர்ச்சி

நினைப்பு வேறு, ஆகவே, அவரது நிலையும் நினைப்பும் வேறுவேறு!

இந்த முகவுரையுடன் இனி நாம் நம் நாட்டுக்குள்ளேயே சுற்றிச்சுற்றி வருவோம்! எந்தெந்த தட்டில் யார் யார் எப்படிப்பட்ட நிலை, நினைப்புகளோடு ஊரைச் சுற்றி வருகிறார்கள் என்பதைக் காண்போம்!

எந்தெந்த நிலையிலிருப்போர், எந்தெந்த நினைப்புக்களோடுச் சுற்றுகிறார் என்பதைப் பார்ப்போம்!

எந்தெந்த நிலையினரை, எந்தெந்த நினைப்புகளுக்குத் தூண்டிவிடுகிறார்கள் என்பதை அறிவோம்! வா நண்பா!

தமிழ் நாட்டில் ஆளும் வாய்ப்பை இழந்துவிட்டது —காங்கிரஸ்!

இது காங்கிரஸ் நிலை.

திராவிட முன்னேற்றக் கழகம் அந்த வாய்ப்பைப் பெற்றிருக்கிறது.

இது, தி. மு. க.வின் நிலை.

மீண்டும் கழகத்தை ஆளவிடக்கூடாது என்பது காங்கிரஸ் நினைப்பு,

பதவி நமக்குப் பெரிதில்லை என்பது கழகத்தின் நினைப்பு.

இளம்பெண் ஒருத்தியின் தாலி அறுபட்டுவிட்டால் அவளுக்கு மறுமணம் தேவை என்பதில் அறிவாளர்கள் மறுப்புக் கூறமாட்டார்கள்.

'தொன்னூறும் பத்தும்' துவண்ட ஒருத்தி தாலி இழந்துவிட்டால் அவளுக்கு 'மறுமணம் தேவை' என்று கூறுவதை எப்படிப்பட்ட முற்போக்குக் கருத்துடையவரும் ஏற்றுக்கொள்ள முடியுமா?

இளம்பெண்ணுக்கு மறுமணம் என்ற விருந்து வழங்கப்பட வேண்டும்!—அவள் நிலை அப்படி! நினைப்பும் சரி!!

நரை திரை விழுந்து, கூனிக் குறுகிவிட்டவளுக்குக் கொடுக்கலாமா? நிலை முறையானதா? நினைப்பு சரியானதா?

கழகம், பதவிகள் வழங்கப் பெற்று ஏற்றுக்கொண்டிருக்கிறது; இருந்தும் அந்தப் பதவியிலிருந்துகொண்டு மக்களுக்கு நன்மைகள் செய்ய முடியாது போனால், எந்த நேரமும் அதனை உதவி எறிந்துவிட்டு வெளியே வந்துவிடத் தயாராக இருக்கிறது!

இது கழகத்தின் நிலையும் நினைப்பும்!

---

நன்றாகத்தெரியும் நான் யார் என்று! பகுத்தறிவுவாதியான நான், பாண்டிய மண்டலத்தை ஆளவேண்டுமே என்ற நப்பாசையாலும் — நன்றாகச் சிந்தித்துப் பார்க்காததினாலும்— சிந்தையைக் கவர்ந்த கொள்கைக்குத் துரோகம் செய்துவிட்டு சிவநெறியை ஏற்றுக்கொள்ள ஒப்பினேன்! சைவத்திற்குச் சரணடைந்தேன்! மண்டலமும் பெரிதல்ல—மணிமுடியும் உயர்ந்ததல்ல—மனத்தைக் கொள்ளைகொண்ட கொள்கைதான் பெரிது என்று உணரவும், உள்ள உறுதி பெறவும், எனக்கு இத்தனைக்காலம் பிடித்தது! சைவத்திற்கு ஆபத்துவரும். ஆகவே திருமேனியை அரண்மனையினுள் நுழையவிடாதே என்று அல்லவா இராசாதிராச சோழர் ஓலை அனுப்பியிருக்கிறார்? சைவம் அழிந்தாலும், அரசு போனாலும் என் இதய அரசியை—இன்பவல்லியை ஒரு நொடியும் பிரிந்திருக்கமாட்டேன்! இதை உமது அரசருக்கு அறிவித்து விடுங்கள்! எட்டி உதைத்ததும் மதுரையின் சிம்மாசனம் தலைகீழாகக் கவிழ்ந்துவிடும் என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்! அந்த அகங்காரத்திற்கு, எனது ஆழ்ந்த அநுதாபத்தையும் தெரிவித்துவிடுங்கள்!...இன்னும் ஒரு செய்தி, முக்கியமான செய்தி, உம்மை மட்டுமல்ல சோழ மன்னரையும் திடுக்கிடும்படிச் செய்யும் செய்தி — சைவ மதத்தை தலைமுழுகிவிட்டு இன்று முதல் பகுத்தறிவாதியாகவே உலவப்போகிறேன்! அதனால் துன்பங்கள் அடுக்கடுக்காக வந்தாலும் அவ்வளவையும் தாங்கிக்கொள்ளும் துணிவைப் பெற்றுவிட்டேன்!' என்று குலசேகரன் ஆவேசத்தோடு எரிமலை கனல் கக்குவதைப் போல பேசி, நெற்றியிலிருந்த திருநீற்றைக் கையால் துடைத்து விட்டு கலகலவென்று சிரித்தான்,

தள்ளாடித் தள்ளாடி நடந்து, தூமகேது அரண்மனையை விட்டு வெளியே வந்தான்.

அந்த அதிர்ச்சி அடங்க, அவனுக்கு இரண்டு நாட்கள் பிடித்தன. படுத்த படுக்கையாகக் கிடந்தவன், மூன்றாம் நாள்தான் எழுந்து உட்கார்ந்தான்.

'போர்! போர்! பாண்டிய நாட்டிற்கும் சோழ நாட்டிற்கும் போர் மூண்டுவிட்டது–பௌத்தம் மாண்டுவிட்டது!' என்று யாரும் அற்ற அந்த அறையில் கத்திப் பேசினான்.

அவன் உள்ளம் மிகவும் குழம்பிவிட்டிருந்தது.

என்ன செய்வதென்றே அவனுக்குப் புரியவில்லை.

'இராசாதிராச சோழனுக்கு ஓலை எழுதவேண்டும்! இன்று ஓலை எழுதினாலும், சோழ நாட்டுப் படைகள் வர இன்னும் ஒரு வாரமாவது பிடிக்கும்! அதன் பிறகு போர்! போர்! அந்தப் போரில் யார் யார் இருப்பார்களோ, யார் யார் இறப்பார்களோ? சோழருக்கு ஓலை அனுப்புவதற்கு முன்பு, அழகு முல்லை அஞ்சலையின் மணத்தை நுகர்ந்துவிட வேண்டும்! ஆமாம், அந்தப் பூரண நிலவை அடைய, இன்றே புறப்படுகிறேன்!' என்று தீர்மானித்தான்.

அடுத்த நொடியே பல்லக்குத் தயாராயிற்று,

ஆரண்ய மாளிகையைச் சுற்றிலும் காவல் காத்து நின்றிருந்த போர்வீரர்களே, அன்று தூமகேதுவின் முகத்தைக் கண்டு நடுநடுங்கிப் போனார்கள் என்றால்—கொடியிடையாள் அஞ்சலை அடைந்த அச்சத்தை அளவிட்டுக் கூறவும் முடியுமா?

ஆனால், உள்ளத்தில் எவ்வளவுதான் அச்ச அலைகள் மோதி விழுந்தாலும், கையிலிருந்த உடைவாளை அவள் கெட்டியாகப் பிடித்திருந்தாள்.

'பாதகா, நெருங்காதே!' என்று துக்கமும் ஆத்திரமும் கலந்த குரலில் அவள் சொன்னதைக் கேட்டு, தூமகேது இடிஇடிப்பதைப் போலச் சிரித்துவிட்டு அந்த மருளும் விழியாளின் மலர்க்கரத்தைத் தாவிப் பிடிக்கப் போனான்.

'ஆ!' என்று அலறியபடி அவன் அசைவற்று நின்றுவிட்டான்!

கையில் கெட்டியாகப் பிடித்திருந்த உடைவாளை, அஞ்சலை தன் மார்பில் நுழைத்துக் கொண்டாள்!

அந்தப் பொன்னவிர் மேனியாளின் மார்பிலிருந்து இரத்தம் வெளியே பீறிட்டு ஓடிவந்துகொண்டிருந்தது!

[வளரும்]

காங்கிரஸ் பதவிகள் வழங்கப் பெற்று ஏற்றுக் கொண்டு இதுவரையில் ஆண்டுகொண்டும் இருந்து விட்டு இனியும் நீ நாடாண்டால், நாங்கள் இடுகாட்டுக் குத்தான் போகவேண்டும் என்ற தீவிர கருத்து மாற் றத்தை மக்கள் மேற்கொண்டதனுல், கொடுக்கப்பட்ட பதவிகளிலிருந்து—தூக்கி எறியப்பட்டது! தூக்கி எறி யப்பட்ட காங்கிரஸ் சொல்கிறது — மீண்டும் கழகம் ஆட்சிக்கு வரக்கூடாது என்று அல்ல—அடுத்த முறை நாங்களே ஆட்சிக்கு வருவோம் என்று!

துவண்டு விழுந்துவிட்ட கிழவி மறுமணம் கேட் கிருள்! இது காங்கிரசின் நிலேயும் நினைப்பும்!

எல்லா அதிகாரங்களேயும் மத்திய அரசு குவித்துக் கொண்டு, கம்பவுண்டர்' நிலேயிலுள்ள ஒரு மாநில அரசில் பதவிப் பொறுப்பு வகிப்பதன் மூலம், நாட்டுக்கு நலம் பேண முடியவில்லே என்ருல் பதவி தேவையில்லே என்பது கழகத்தின் நிலேயும் நினைப்புமாக இருக்கிற அதே வேளேயில்

அதே பொறுப்பிலிருந்து வெளியேற்றப்பட்டவர்கள் —தூக்கி எறியப்பட்டவர்கள் மீண்டும் அந்தப் பதவிப் பொறுப்புக்குச் செல்லவேண்டும் என்ற நிலேயும் நினைப் பும் கொள்கிருர்கள் என்ருல் அவர்களது நிலேயிலும் நினைப்பிலும் நாட்டு நலம்—மக்கள் வாழ்வு இடம் பெற் றிருக்கிறது என்பது பொருளா? தன்னலம் பேணத் துடிக்கிருர்கள் என்பது பொருளா?

கழகத்தின் நிலேயும் நினைப்பும் எப்படி இருக்கிறது?

காங்கிரசின் நிலேயும் நினைப்பும் எப்படிப் போய்க் கொண்டிருக்கிறது?

விருந்துக் கூடத்திலே கூடி இருப்பவர்கள், படைக் கப்படாதவைகளேக் கேட்பது தவறு! வாழ்க்கையிலே வழங்கப்படாதவற்றைச் கேட்பது தவரு?

நண்பா! காங்கிரஸ் விருந்துக் கூடத்திலேஅமர்ந்து கொண்டு; அது கொண்டு வா இது கொண்டு வா என்று ஓலமிடுகிறது! மூன்றுபடி எங்கே? கொள்முதல் விலே உயர்வு எங்கே? என்று?

கழகம், வாழ்க்கை வசதிகளே மத்திய அரசிடம் கேட்டுப் பெறவேண்டியனவற்றைக் கேட்டுக் கொண் டிருக்கிறது.

சேலம் உருக்காலே தூத்துக்குடி திட்டம் என்பது போல.

காங்கிரஸ்—கழகம் இவற்றின் நிலே, நினைப்பு இப் படி இப்படி!!

இந்தியத் துணைக்கண்டத்து மொத்த மாநிலங்களி லும் இந்தியைத் திணித்துவிட்டால்—வருங்கால இந்தி பேசுவோரின் சந்ததியர்—கால காலத்துக்கும் ஆட்சிப் பொறுப்பிலிருக்க வகை செய்திட முடியும் என்பது காங் கிரசின் நினைப்பு!

அந்த கெடுமதியை ஒப்புக்கொள்ள முடியாமலிருப் பது—தமிழகத்தின் நிலே! மேற்கு வங்கத்தின் நிலே! அரியாளுவின் நிலே!! ஆழ்ந்து அகழ்ந்து சிந்திக்கும் போது கேரளத்தின், மைசூரின், ஆந்திராவின் நிலேகள்!

அவரவரது நிலேயும் நினைப்பும் அப்படி! மத்திய அரசின் நிலேயும் நினைப்பும் இப்படி!!

காங்கிரசுக்குள்ளேயே வந்து பார்!

திரு. பக்தவத்சலம் அவர்களது நிலே என்ன? நினைப்பு என்ன? திரு. காமராசரது நிலேயென்ன நினைப்பு என்ன?

அனேத்திந்திய மட்டத்தில் பிரதமர் இந்திரா அம்மையாரின் நிலேயும் நினைப்பும் எப்படி? காமராசரது நிலேயும் நினைப்பும் எப்படி? நந்தா அவர்களது நிலே என்ன, நினைப்பென்ன?

சுதந்திரம் வந்துவிட்டபின்னர் அமைக்கப் பெற்ற முதல் அமைச்சரவையிலிருந்து, பறிமுதல் செய்து கொள்ளப்பெறும் முன்பு வரையிலிருந்த கடைசி அமைச்சரவை வரையில் அமைச்சர் அந்தஸ்தில் இருந் தவர் திரு. பக்தவத்சலம்! இது அவரது நிலே! அந்தப் பதவி பறிக்கப்பட்டுவிட்ட பின்பு—பலவந்தமாக மக்க ளால் எடுத்துக்கொள்ளப்பட்டுவிட்ட பின்பு—அவரது நினைப்பு எப்படி இருக்கும்? கழகமே ஆண்டுகொண்டி ருக்க வேண்டும் என்று அவரல் ஒப்புக்கொள்ள முடி யுமா? நினைத்தாவது பார்க்க முடியுமா? முடியாத— மனம் பொறுக்காத நிலேயில்—ஒன்று, இரண்டு, மூன்று என்று குற்றச்சாட்டுக்களேயல்லவா ஷட்டகரைவிட்டுச் சொல்ல நினைக்கும்!

அனேத்திந்தியாவுக்கும் காங்கிரசுக்குத் தலேவர் காமராசர்! பல மாநிலங்களிலும் அந்தக் கட்சியின் ஆட்சிப் பொறுப்பு பறித்துக் கொள்ளப்பட்டிருக்கிறது!

தமிழகம் உள்ளிட்ட பல மாநிலங்களில் காங் கிரசுக்குள்ளேயே குத்து வெட்டுக்கள்!

மரைக்காயரே முதலமைச்சராக இருக்க ஒப்புவதா? வெங்கிடுசுப்பாரெட்டியாரை அனுமதிப்பதா? என்ற குழப்ப நிலே!

தன்னேக் கலக்காமல், பிரதமர் நந்தா மூலம் காங் கிரஸ் கமிட்டியை கலேக்கலாமா? மதிப்பதாகுமா இது? தான் தலேவர் பதவியில் இருந்துகொண்டுதானிருக் கிறேம் என்பதை ஒப்புக்கொள்கிற ஒரு முறைதாஞ இது? என்பனபோன்ற நினைப்புக்கள்! ஊடே, அந்தத் தலேவர் பதவிக்குத் தேர்தல் வேறு, அண்மையில்!!

காமராசரது நிலேயும் நினைப்பும் எப்படி இருக்கும்? எப்படி இருக்கவேண்டும்?

காமராசரே மீண்டும் காங்கிரசுத் தலேவராகிவிட் டால், காங்கிரசைத் தன மனம்போன போக்கில் விரட் டிச் செல்ல முடியாது என்ற நிலேயும் நினைப்பும் நேரு மகளாருக்கு!

அவரது இஷ்டப்படி ஆடிப்பார்த்தாலாவது தமக்கு மீண்டும் 'இடம்' கிடைக்காதா என்ற நிலேயும் நினைப்பும் நந்தா அவர்களுக்கு!

கூலிக்கு மாரடிப்போரின் நிலேயும் நினைப்பும் உனக் குச் சொல்லித் தெரிய வேண்டியதில்லே! எப்படியாவது அவர்கள் வயிறு நிரம்பிக்கொண்டிருக்கட்டும்!!

சிறியதைப் பெரிதுபடுத்தியும், பெரியதைச் 'சிறிசு' ஆக்கியும் செய்திகளேக் கூட்டிக் குறைத்து, மாற்றித் திரித்து வெளியிடுவதன் மூலமாவது நம் வயிறு நிரம் பட்டும் என்பது ஏடுகள், இதழ்கள் நடாத்துவோரில் சிலரது நிலே, நினைப்பு!!

விவசாயிகளது கொள்முதலேக் கூட்டித் தரவேண் டும் என்று கோரிக்கை விடுப்பதன் மூலமாவது தங்கள் வயிற்றைக் கழுவிக்கொள்ளும் 'வேலே'யினைச் செய்து கொண்டிருக்கலாம் என்பது சிலரது நிலே, நினைப்பு!

தமிழகக் கொள்முதல் விலே நியாயமானதே! விலே கூட்டித் தரவேண்டியதில்லே என்பது டில்லியின் நிலே, நினைப்பு!

இன்னும் சிலர் இருக்கிருர்கள், 'பெரிய மனிதர்கள் நாம்' என்ற நினைப்பில்! நிலேயிலல்ல! ரதத்தின்மீது அமர்ந்திருக்கும் ஈ என்னுல் எவ்வளவு புழுதி கிளம்பு கிறது என்று எண்ணுவதைப்போல! பல பெரிய காரியங்கள் நடைபெறுகின்ற வேளேயில், 'தன்னுல் தான் அவை நடைபெறுகின்றன' என்று எண்ணுவோர்! தனக்கு ஒன்றின்மீது பொறுப்புக்கள் இருந்தாலும் இல்லாவிட்டாலும் இருப்பதாகக் காட்டிக்கொண்டுத் தீரவேண்டிய நிலேயும் நினைப்பும் அவர்களுக்கு—அவர்

கள் அப்படி இருந்தால்தான், அவர்களது வயிறு நிரம்ப முடியும்! நிலை அப்படி!

வேறு தரத்தினர் சிலர் இருக்கிறார்கள். உதாரணத்துக்கு உன்னையே எடுத்துக் கொள்! நீ கழகத்தில் ஒரு முக்கியப் பொறுப்பினை வகிக்கிறாய் என்று வைததுக் கொள். பெருந் தலைவர்கள் சிலரது அறிமுகம் அல்லது தொடர்பு உனக்கு இருக்கிறது. அவர்களது சிலபல யோசனைகளைக் கேட்டுச் செயல்படவேண்டிய நிலையில் நீ இருக்கிறாய்! இது உன் நிலை.

ஆனால் நண்பா, உன்னைப்பற்றிய பிறரது நினைப்புக்கள் எப்படி எப்படி எல்லாம் இருக்கக் கூடும்?

கழகம் ஆட்சிக்கு வந்துவிட்டது! சமூக வாழ்க்கையில் ஒவ்வொருவரும் ஏதோ ஒரு வகையில் அரசாங்கத்தோடு பிணைக்கப்பட்டிருக்கிறார்கள்! அவர்களில் பலபேருக்கு அரசாங்கத்தின் மூலம் ஆகவேண்டிய ஏதோ சில காரியங்களும் இருக்கத்தான் செய்கின்றன.

காரியம் ஆகவேண்டிய சிலரில் உனக்கு அறிமுகமானவர்கள் ஒரு சிலரும் இருக்கக்கூடுமில்லையா? அத்தகையோர் உன்னைக்கொண்டு அதனை முடித்துக் கொள்ள நினைக்கின்றனர்! உன்னால் அது முடியும் என்று நம்புகின்றனர்! நீ அரசாங்கத்திடம் தொடர்புகொண்டுள்ளவர்களுடன் தொடர்பு வைத்துள்ளவன் என்று நினைக்கின்றார்கள்! இது உன்னைப்பற்றி பிறரது நினைப்பு!

உன் நிலை ஒன்று-அதனை வைத்து உன்னைப்பற்றிய பிறரது நினைப்பு ஒன்று.

அதாவது உன் நிலைக்குப் பிறரது நினைப்பு!

வேறான நிலையோடு வேறான நினைப்பு. உன்னால் ஒரு காரியத்தை நிறைவேற்றித்தர முடியுமோ முடியாதோ உன் நிலையை வைத்து—அதன் மீது பிறரது நினைப்பு எழுகிறது!

இப்படிப்பட்ட சூழ் நிலைகளும் உண்டு. தமிழகத்தில் 'ஆசை'களின் 'கலவை'யால் ஆன மனிதர்களைச் சுற்றி எத்தனையோ நிகழ்கின்றன! ஏனோ நிகழ்கின்றன!

விருந்து வேறு—வேண்டுகோள் வேறு என்பது புரிந்து கொள்ளப்படாமலேயே அவைகள் எந்தெந்த வடிவத்திலேயோ நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. நிலையும் நினைப்புமாக! நிலைவேறாக! நினைப்புவேறாக!!

எப்படியோ, இந்தியத்துணைக்கண்டத்தின் கதாபாத்திரங்களாக உலவி வருவோர், ஒப்வொருவரது நிலையும் நினைப்பும் ஒவ்வொரு தன்மையில் இருந்தும் இயங்கியும் வருகிறது; மாறிக்கொண்டிருக்கிறது!

நீயும் நானும் இருக்கிறோம்!

நம் நிலையும் நினைப்பும் எப்படி?

தமிழகத்தின் நிலை, நம் நிலை — தமிழக அரசின் நினைப்பு நம் நினைப்பு — அப்படியே இருக்கட்டும் நமது நிலையும் நினைப்பும்!

அன்புள்ள,

**திருவாரூர் முத்துராமன்.**


# கோவை மாவட்ட கூட்டுறவு நூற்பு ஆலை

நம் நாட்டிலுள்ள கைத்தறி நெசவாளர்களின் நலனுக்காக உருவாக்கப்பட்டிருக்கும் இந்த ஆலையில் 20, 30, 40, 2/20, 2/30, 2/40 முதலிய நம்பர்களில் நேர்த்தியான நூல்கள் தயாரிக்கப்பட்டு மலிவான விலையில் தரப்படுகின்றன சிறந்த முறையில் நடநதுவரும் இந்த ஆலைக்கு இப்போது மேலும் பங்குகள் சேர்க்கப்படுகின்றன. பங்குகள் வேண்டுபவர்கள் விவரங்களுக்கு ஆலையின் முகவரிக்கு கடிதம் எழுதவும்

நிர்வாகத்தினர்.

தபால் பெட்டி-8

**தாராபுரம்.**

**கோவை மாவட்டம்**

நோயற்ற நீண்ட நல்வாழ்வுக்கு!

# சித்தர் நவலோக கல்பம்

தங்கம் வெள்ளி, தாம்பரம், மற்றும் பல உலோகங்கள், அனேக அபூர்வ மூலிகைகள், மருந்துப் பொருள்களுடன் பல வருட ஆராய்ச்சிக்குப்பின் உருவானது.

டாக்டர் சாது வீ. நாராயணசாமி பிள்ளையின்

## ஸ்ரீ ராஜராஜேஸ்வரி சித்த வைத்தியசாலை

—[REGD]—

307 / 308, திருவல்லிக்கேணி ஹைரோடு,
திருவல்லிக்கேணி, சென்னை-5

தொலைபேசி எண்: 84786

கிளை வைத்தியசாலை:
மாமண்டூர் வடபாதி, பாலாற்றங்கரை சமீபம், செங்கற்பட்டு ஜில்லா.

ஆஸ்துமா, மதுமேகம், (டையாபடீஸ்) T. B. குஷ்டம், வெண் குஷ்டம்,
யானைக்கால் மற்றும் நாள்பட்ட கொடிய வியாதிகளுக்கும்,
டாக்டர் சாது வீ. நாராயணசாமி பிள்ளை அவர்களே
பிரதி ஞாயிறு, செவ்வாய், வியாழக்கிழமைகளில் சென்னையிலும்
பிரதி திங்கள், புதன், வெள்ளி, சனிக்கிழமைகளில் கிளை வைத்தியசாலையிலும்
நோயாளிகளை நேரில் கவனித்து மருந்து கொடுக்கிறார்.


ஆசிரியர், வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், சின்னகாஞ்சிபுரம்
86, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், அச்சிட்டு வெளியிடப்படுகிறது.